# பூங்கதிர்

## இதழ் 06

பொதுநூலகம் - பூநகரி

**"இனங்களுக்கிடையில் புரிந்துணர்வை ஏற்படுத்துவதற்கான வாசிப்பு"**




**வெளியீடு:**

**பூநகரி பொது நூலகம்,**
**பூநகரி,**
**கிளிநொச்சி.**

**2018**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பூங்கதிர்

## இதழ் 06

புத்தகத்தை வாசிப்போம் வாழ்க்கையை நேசிப்போம்

ஒற்றுமையே உயர்வு

பொதுநூலகம் - பூநகரி

வெளியீடு:

**பூநகரி பொது நூலகம்**

**பூநகரி**

**கிளிநொச்சி**

**2018**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| சஞ்சிகையின் பெயர் | : | பூங்கதிர் |
| அட்டைப்படம் | : | வி.பிரபாகரன் (பிரபா ஆட்ஸ்) யாழ்ப்பாணம் |
| பதிப்புரிமை | : | ஆலோசனைக்குழு, பூநகரி பொது நூலகம். |
| முதலாவது பதிப்பு | : | ஒக்டோபர் 2018 |
| பிரதிகள் | : | 100 |
| பக்கங்கள் | : | IX, 53 |
| வெளியீடு | : | நூலகர் பூநகரி பொது நூலகம். |
| அச்சுப்பதிப்பு | : | ஸ்ரீ மாருதி பிறிண்டேர்ஸ் |




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பூங்கதிர் சஞ்சிகைக்கான வாழ்த்துச் செய்தி

பூநகரி பிரதேச சபையின் கீழ் உள்ள பொது நூலகத்தினால் ஆண்டு தோறும் வாசிப்பு வாரத்தினை முன்னிட்டு வெளியாகும் பூங்கதிர் சஞ்சிகைக்கான வாழ்த்து செய்தி தெரிவிப்பதில் பூநகரி பிரதேச சபையின் தவிசாளர் என்ற வகையில் எனக்கும் சந்தர்ப்பம் ஒன்று கிடைத்ததையிட்டு பெரு மகிழ்வடைகின்றேன்

இவ் பொது நூலகத்தினால் ஆண்டு தோறும் வாசிப்பு வாரத்தினை முன்னிட்டு வாசிப்பை ஊக்குவிக்கும் நோக்கத்துடன் பாடசாலை மாணவர்கள் மத்தியிலும் அதை வளர்க்கும் நோக்குடன் அயராது சேவையாற்றி வருவது பெருமதிப்பிற்குரியது. இச்சஞ்சிகை இவ்வாண்டில் ஆறாவது வருடத்தில் கால்பதிப்பது மிகவும் மகிழ்ச்சியளிக்கின்றது. இச்சஞ்சிகையில் கவிதை, கட்டுரை, சிறுகதை, பொதுஅறிவு, சுகாதாரம் ஆகிய விடயங்கள் அனைத்தையும் தாங்கிவருவது சிறப்பு. தொடர்ந்தும் எமது இனம், மொழி, கலை, கலாச்சாரம், உரிமை ஆகியவற்றை கைவிடாது ஆலமரம் போல் வேர்விட்டு விழுதெறிந்து விருட்சமாக நிழல் கொடுக்க வேண்டும் என்றும் எமது காலத்தில் இன்னும் இன்னும் சிறப்பாக உயர்வடைய வேண்டுமென்று எனது வாழ்த்துக்களை உளமார வாழ்த்தி நிற்கின்றேன்.

அ.ஐயம்பிள்ளை
தவிசாளர்
பிரதேசசபை
பூநகரி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வாழ்த்துச் செய்தி

**"வாழக்கல்"** என்பார் ஔவையார். நாம் வாழ்வதற்காகக் கற்க வேண்டும். கற்றலின் பிரதான அம்சமே வாசிப்பு ஆகும்.நல்ல நண்பர்களாக வாழ்விற்கு உறுதுணையாக இருக்கும் நூல்களை ஆக்கி வெளியிடுவது என்பதும் ஒரு சிறந்த சமூகப் பணி ஆகும். இப்பணியை பூங்கதிர் சஞ்சிகையானது வருடாவருடம் ஆற்றி வருவது பாராட்டுக்கும் போற்றுதற்கும் உரிய ஒரு விடயம் ஆகும்.

பூநகரி மண்ணின் கல்வி வளர்ச்சியில் எமது நூலகங்கள் தம்மாலியன்ற பணிகளை ஆற்றி வருவதுடன், ஏழை பணக்காரன் என்ற பேதமின்றி அனைவருக்கும் உதவும் நூல்கள் போலவே அவையும் பணியாற்றி வருவது குறிப்பிடத்தக்க விடயமாகும்.

மாணவர்கள், வாசகர்கள் எனப் பலரும் இந் நூலகத்தினைச் சிறந்த முறையில் பயன்படுத்தி வையத்துள் வாழ்வாங்கு வாழவேண்டும் என்பதே எனது அவாவாகும்.

இச்சஞ்சிகையானது வருடாவருடம் புதுப்பொலிவுடன் வெளிவரவும் காலத்திற்கேற்ற வடிவம் தாங்கி வரும் இச்சஞ்சிகை சிறப்புறவும் வாழ்த்தி இறையாசி வேண்டி நிற்கின்றேன்.

ந.பிரபாகரன்
பிரா.உள்ளூராட்சி உதவி ஆணையாளர்
கிளிநொச்சி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பூங்கதிர் புதுமை படைக்கட்டும்

பூநகரி பிரதேச சபையானது தனது அதிகார பிரதேசத்துக்குள் மக்கள் அத்தியாவசிய சேவைகள், வீதிகள் அமைத்தல், சுகாதாரம் பேணல் போன்ற பணிகளுடன் தனது நூலக சேவைகளையும் ஆற்றி வருகின்றது, இந்தவகையில் கடந்த காலங்களில் மக்களினது தேவை அறிந்து வாசகர்களுக்கும், மாணவர்களுக்கும் தேவையான புத்தகத்தை கொள்வனவு செய்து நூலக சேவையினை விரிவுபடுத்தி வருகின்றது.

இன்றைய காலகட்டத்தில் விஞ்ஞான நவீன சாதனங்களால் வளர்ச்சிப்போக்கில் வாசிப்பு என்பது எம்மிடையே மிகவும் அருகிவருவது காணக்கூடியதாகவுள்ளது. எனவே வாசிப்பின் முக்கியத்துவத்தினை கருப்பொருளாகக் கொண்டு ஒவ்வொரு ஆண்டும் ஒக்டோபர் மாதத்தில் தேசிய ஆவணமாக்கல் சபையால் நாடு முழுவதும் வாசிப்பு மாதமாகவும், வாசிப்பினை ஊக்குவிக்கும் நிகழ்வாகவும் பிரகடனப்படுத்தி வருகின்றது.

இந்த வகையில் பூநகரி பிரதேச சபையானது தனது உப அலுவலக பூநகரி, பல்லவராயன்கட்டு, இரணைதீவு ஆகியன நூலகங்கள் இவ்வாசிப்பு மாத நிகழ்வுகளை சிறப்பாக நடாத்தி அதன் சிறப்பம்சமாக பூங்கதிர், முத்தொழி, பல்லவம் போன்ற முத்தான மூன்று சஞ்சிகையை வருடந்தோறும் வெளியிட்டு வருகின்றது. அத்துடன் கடந்த காலத்தில் தேசிய ஆவணமாக்கல் சபையால் பல விருதுபெற்று உள்ளது என்பது பெருமைபட வேண்டிய விடயமாகும்.

பூநகரி பொது நூலகத்தால் இவ்வாண்டும் ஆறாவது இதழாக வெளிவரும் பூங்கதிர் நல்ல அறிவுசார் ஆக்கங்களை சுமந்து வருவதுடன் மாணவர்களிடையே புதைந்து கிடக்கும் ஆற்றலை வெளிக்கொண்டு வரும் ஒரு படைப்பாக உள்ளது என்பதில் பெருமகிழ்ச்சியடைவதுடன் இவ்விதம் தொடர்ந்து வெளிவருவதற்கு எனது வாழ்த்துக்களை தெரிவிப்பதுடன் இதனை வெளியிடுவதற்கு உதவிய நூலக அங்கத்தவர்கள், வாசகர் வட்டம், மற்றும் ஆலோசனை குழுவினருக்கும் எமக்கு உதவிய நலன்விரும்பிகள் அனைவருக்கும் நன்றியை அன்புடன் தெரிவித்துக் கொள்கின்றேன்.

முத்துலிங்கம் இராஜகோபால்
செயலாளர்,
பிரதேச சபை,
பூநகரி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வாழ்த்துச் செய்தி

பூநகரி பிரதேச சபையின் பூநகரி பொது நூலகத்தினால் வெளியிடப்படும் "பூங்கதிர்" சஞ்சிகைக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் நான் மகிழ்ச்சியடைகின்றேன்.

தகவல் தொடர்பு சாதனங்களின் அதீத வளர்ச்சியினால் இன்று வாசிப்புப் பழக்கம் அருகி வருவதோடு நூலகங்களுக்குச் சென்று ஆற அமர இருந்து வாசிக்கும் பழக்கம் பலருக்கு இல்லாமல் உள்ளமையும் ஒரு குறைபாடேயாகும்.

எமது பிரதேசத்தில் அடிப்படை வசதிகளோடு சிறப்புற அமைந்திருக்கும் இந் நூலகம் பூநகரி மக்களுக்கு கிடைத்த ஓர் சிறந்த வளமாகும். இதனை மேலும் வளப்படுத்த பாடுபடும் அனைவருக்கும் எனது மனப்பூர்வமான வாழ்த்துக்கள்.

சிவகுமாரன் ஸ்ரீரஞ்சன்
உபதவிசாளர்
பிரதேச சபை,
பூநகரி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நூலகரின் உள்ளத்தில் இருந்து...............

நூலகத்தின் நூலகர் என்ற வகையில் பெருமை அடைகின்றேன். 2004 ஆம் ஆண்டு தொடக்கம் வாசிப்பின் முக்கியத்துவத்தை உணர்த்தும் வகையில் இலங்கை தேசிய நூலக ஆவணமாக்கல் சேவைகள் சபையினால் ஒவ்வொரு வருடமும் ஒக்டோபர் மாதத்தை தேசிய வாசிப்பு மாதமாகப் பிரகடனப்படுத்தி நூலகங்கள் ஊடாக சமூகத்தில் வாசிப்பு தொடர்பாக விழிப்புணர்வுகளை ஏற்படுத்திவருவது அனைவரும் அறிந்த விடயம். இந்த வகையில் இவ்வாண்டு **"இனங்களுக்கிடையில் புரிந்துணர்வை ஏற்படுத்துவதற்கான வாசிப்பு"** என்ற தொனிப்பொருளில் நூலகங்களின் மூலம் வாசகர்கள் மாணவர்களிடையே வாசிப்பினை ஊக்குவிக்கும் முகமாக விழிப்புணர்வுகளை நடாத்தி வருகின்றோம்.

பூநகரி பிரதேச சபையின் பூநகரி பொது நூலகமானது அங்கத்துவர்களை அதிகரித்து வாசிப்பின் முக்கியத்துவத்தினை உணர்த்தும் வகையில் பல நிகழ்ச்சிகளை நடாத்தியிருந்தோம். அதில் ஓர் அங்கமாக வாசகர்களின் ஆக்கங்களையும் பாடசாலை மாணவர்களின் ஆக்கங்களையும் தேசிய வாசிப்பு மாதப் போட்டியில் முதலிடம் பெற்ற ஆக்கங்களையும் தாங்கி இச்சஞ்சிகையானது "ஆறாவது பூங்கதிர்" இதழாக இச் சஞ்சிகை பூநகர் வாழ்மக்களின் கவிதை, கட்டுரை, சிறுகதை, பொது அறிவு போன்ற ஆக்கங்களை தாங்கி வெளிவருவது அனைவருக்கும் பயன் தருகின்றது.

"பூங்கதிர் - 06" உருவாக்கத்திற்கு உதவிய பூநகரி பிரதேச சபை நிர்வாகம், நூலக ஆலோசனைக்குழு, மற்றும் ஆக்கங்கள் தந்துதவிய அனைவருக்கும் நன்றியை தெரிவித்து கொள்வதோடு பூங்கதிர் சஞ்சிகையானது தொடர்ந்தும் புத்தொளிவுற்று வலம் வர தங்கள் ஆதரவினை நாடி நிற்கின்றேன்.

நன்றி

திருமதி. காந்தரூபன் தர்ஷனி,
நூலகர்,
பூநகரி பொது நூலகம்,
பிரதேச சபை, பூநகரி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கௌரவ உறுப்பினர்களின் விபரம்
# பூநகரி பிரதேச சபை – 2018

| இல | முழுப்பெயர் | தொலைபேசி இலக்கம் |
|---|---|---|
| 01 | கௌரவ தவிசாளர் அருணாசலம் ஐயம்பிள்ளை | 077-4189656 |
| 02 | கௌரவ உபதவிசாளர் சிவகுமாரன் ஸ்ரீரஞ்சன் | 077-8862556 |
| 03 | கௌரவ உறுப்பினர் இராசையா பூபாலசிங்கம் | 077-9047195 |
| 04 | கௌரவ உறுப்பினர் விக்கினேஸ்வரன் ஜெயகாந்தன் | 077-8767223 |
| 05 | கௌரவ உறுப்பினர் கணேசமூர்த்தி கருணாகரன் | 077-1989909 |
| 06 | கௌரவ உறுப்பினர் இராமுப்பிள்ளை செல்வராசா | 076-8582126 |
| 07 | கௌரவ உறுப்பினர் சுப்பிரமணியம் சந்திரபோஸ் | 076-6418016 |
| 08 | கௌரவ உறுப்பினர் ஜெயசித்திரா தயானந்தன் | 077-6995413 |
| 09 | கௌரவ உறுப்பினர் முடியப்பு எமிலியாம்பிள்ளை | 076-9251766 |
| 10 | கௌரவ உறுப்பினர் அருணாசலம் கேதீஸ்வரன் | 077-6548218 |
| 11 | கௌரவ உறுப்பினர் கணவதிப்பிள்ளை தர்மராசா | 077-4637756 |
| 12 | கௌரவ உறுப்பினர் ஞானம் ரதிகரன் | 076-6966279 |
| 13 | கௌரவ உறுப்பினர் உதயதர்சினி தனேந்திரன் | 077-4246014 |
| 14 | கௌரவ உறுப்பினர் மேரிடென்சியா யோன்பின்ரன் | 077-2198510 |
| 15 | கௌரவ உறுப்பினர் வட்சலாதேவி வசந்தகுமார் | 077-0453085 |
| 16 | கௌரவ உறுப்பினர் கார்த்திகேசு யோகராசா | 077-0206382 |
| 17 | கௌரவ உறுப்பினர் செல்வராசா நிரோஷன் | 077-4454435 |
| 18 | கௌரவ உறுப்பினர் ஹஜ் முஹமட் கபீர் | 076-8896744 |
| 19 | கௌரவ உறுப்பினர் குலராஜசிங்கம் புவியரசன் | 077-5278826 |
| 20 | கௌரவ உறுப்பினர் டோறஸ் பிரதீபன் | 077-4217952 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பூநகரி பிரதேச சபை
# பூநகரி பொது நூலகம்

## தேசிய வாசிப்பு மாதம் - 2018
## ஆலோசனைக்குழு உறுப்பினர்கள் விபரம்.

| இல | பெயர்விபரம் | பதவி | நிலை/அலுவலகம்/முகவரி |
|---|---|---|---|
| 01. | கௌரவ திரு.அ.ஐயம்பிள்ளை | தலைவர் | கௌரவ தவிசாளர், பூநகரி பிரதேச சபை |
| 02. | திரு.மு.இராஜகோபால் | உப தலைவர் | செயலாளர், பூநகரி பிரதேச சபை |
| 03. | திருமதி.கா.தர்ஷனி | செயலாளர் | நூலகர், பூநகரி பிரதேச சபை |
| 04. | திரு.கே.தனபாலசிங்கம் | ஆலோசகர் | சன சமூக உத்தியோகத்தர் |
| 05. | திரு.பொன்.தில்லைநாதன் | உறுப்பினர் | ஓய்வுநிலை உதவிகல்விப்பணிப்பாளர் |
| 06. | திருமதி.இ.சூரியகுமாரி | உறுப்பினர் | அதிபர், கிளி/நல்லூர் மகா வித்தியாலயம் |
| 07. | திரு.த.சிவபாதசுந்தரம் | உறுப்பினர் | ஓய்வுநிலைதொழில்நுட்ப உத்தியோகத்தர் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பூநகரி பிரதேச சபை

# பூநகரி பொது நூலகம்

## தேசிய வாசிப்பு மாதம் - 2018

### வாசகர் வட்ட உறுப்பினர்கள் விபரம்.

| இல | பெயர் விபரம் | பதவி | நிலை/அலுவலகம்/முகவரி |
|---|---|---|---|
| 01. | கௌரவ திரு.அ.ஐயம்பிள்ளை | தலைவர் | கௌரவ தவிசாளர், பூநகரி பிரதேச சபை |
| 02. | திரு.மு.இராஜகோபால் | உப தலைவர் | செயலாளர், பூநகரி பிரதேச சபை |
| 03. | திருமதி.கா.தர்ஷனி | செயலாளர் | நூலகர், பூநகரி பிரதேச சபை |
| 04. | திரு.கே.தனபாலசிங்கம் | ஆலோசகர் | சன சமூக உத்தியோகத்தர் |
| 05. | செல்வன்.மு.டிலக்ஷன் | உறுப்பினர் | மாணவன், நெற்புலவு, பூநகரி |
| 06. | திருமதி.கு.சுபாஜினி | உறுப்பினர் | நூலக தொண்டர், பூநகரி பொது நூலகம் |
| 07. | செல்வி.கு.புகழினி | உறுப்பினர் | மாணவி, ஞானிமடம் அ.த.க பாடசாலை |
| 08. | திரு.ச.வல்லிபுரநாதன் | உறுப்பினர் | மட்டுவில் நாடு மேற்கு, பூநகரி |
| 09. | செல்வி.க.தணிகா | உறுப்பினர் | கால்நடை வைத்திய நிலையம், பூநகரி |
| 10. | திரு.ப.செல்வரத்தினம் | உறுப்பினர் | மட்டுவில் நாடு மேற்கு, பூநகரி |
| 11. | செல்வி.ஹீ.கயலரசி | உறுப்பினர் | மாணவி, கிளி பூநகரி மத்திய கல்லூரி |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளடக்கம்


1. அட்டைப்படம் உங்களுடன்
2. வாசிப்பை நேசிப்போம்
3. மனம் உண்டானால் இடம் உண்டு
4. நல்லொழுக்கமிக்க சமுதாயத்தைக் கட்டியெழுப்புவதில் நூலகங்களின் பங்களிப்பு
5. இலக்கியங்களுக்குள் சிறுவர்களை ஈர்த்தல்
6. அனுபவக் கல்வி
7. வாசிப்பின் மகத்துவம்
8. பொது அறிவு
9. அறிவுகளின் சங்கமம்
10. வாழ்க்கைக்கு வழிகாட்டுவது நூல்களே
11. வியக்க வைக்கும் தமிழர் அறிவியல்
12. வாசிப்பின் முக்கியத்துவம்
13. புத்தகம் வாசித்தல்
14. வாசிப்பினால் உயர்ந்த அறிவியல் மேதைகள்
15. பணிவே வலிமை
16. புத்தகம்
17. உடலில் உள்ள கொழுப்பைக் கரைக்கும் சூரிய போதா பிராணயாமம்
18. உலகின் வித்தியாசமான நூலகங்கள்
19. இலட்சிய வாழ்வு
20. ஏர்னெஸ்ற்றோ சேகுவேரா எனப்படும் சே – புரட்சியின் சூரியன்
21. நூலகம் உருவான வரலாறு, நூலகம் பிறந்த கதை
22. பூநகரிக்கு உயிர் கொடுப்போம்
23. தமிழர் வாழ்வும் சம்பிரதாயங்களும்
24. புத்தகங்களின் பெருமையும் நூலகங்களின் தேவையும்
25. கற்பகத்தரு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அட்டைப்பட விளக்கம்



கடல் சூழ்ந்த இலங்கைத்தீவில் நான்கின மக்களால் கூடி வாழும் நாம் ஒற்றுமையுடன் குளத்தில் வளரும் தாமரையாக விழிப்புணர்வு பெற்ற இளம் சமூகமாக நறுமணத்துடன் அழகாக மலரும் மொட்டுக்களாய் இலங்கையில் நாம் பெருகி சூரிய ஒளியினைப் போல் நல் ஒளிவீச இருள்நீக்கி சுடர் ஒளியை நிலைக்க செய்து மிகை அறிவுடன் ஒற்றுமையாய் வாசிப்பை நேசித்து மனிதநேயம் கொண்டு இனங்களுக்கிடையில் புரிந்துணர்வைப் பேணுவோமாக,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாசிப்பை நேசிப்போம்
# (வாசிப்பு மாதப்போட்டியில் முதலிடம் பெற்ற கவிதை)

செல்வி.ராஜ்குமார் வாசுகி
தரம் 09
கிளி/செல்லியாதீவு அ.த.க.பாடசாலை

உயிர் மேம்பட வேண்டின் சுவாசி
உள்ளம் மேம்பட வேண்டின் வாசி
உயிருக்கு உறுதுணை சுவாசிப்பு
உள்ளத்திற்கு உறுதுணை வாசிப்பு

பிரான்சிய நாட்டு தளபதி நெப்போலியன்
பிறந்து ஐந்து வயது முதல் வாசிப்பை நேசித்தவர்
போருக்கு போகும் போது பேராயுதங்களுடன்
புத்தகங்களையே கொண்டு சென்றார்

புத்துயிர் ஊட்டிய புத்தகங்களும்
புதுமை தந்திடும் புத்தகங்களையும்
நித்தமும் வாசிப்பை நேசித்த உயிர்கள்
நிஜமாகவே வாழ்க்கையில் முன்னேறியவர்

அகிலம் தெரிய வேண்டின் வாசி
அனைத்தும் அறிய வேண்டின் வாசி
பொது அறிவு வளர வேண்டின் வாசி
பொது வாழ்க்கை வளர வேண்டின் வாசி

ஊடகங்களில் சிறந்த ஊடகம் பத்திரிகை
ஊட்டி வளர்க்கும் தாயும் பத்திரிகை
அகிலத்தை அறிய வைக்கும் கருவியும் வாசிப்பு
அனைத்தையும் அறிய வழிவகுப்பதும் வாசிப்பே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


பண்புடனே மாணவன் பாரினிலே
உயர்ந்திட வழிகோலுவதும் வாசிப்பே
எண்ணையும் எழுத்தையும் எம் கண்முன்னே
எழுத்துக்களாக கொண்டு வரும் கருவியும் வாசிப்பு

புத்தகத்தை நீ தலை குனிந்து வாசித்தால்
நாளை உன்னை தலைநிமிர்ந்து நடக்க வைக்கும்
கண்ணும் கருத்துமாய் எண்ணும் எழுத்துமாய் கற்ற கல்வி
வாசிப்பினாலே என்பது யாருமறிந்த உண்மையே

அகிலத்தை அறிய வைக்கும் கருவியாக விளங்கி
அனைத்தையும் தெறிய வைக்கும் அருவியாக விளங்கி
நாள்தோறும் எமக்கு நல்ல நண்பனாய் விளங்கி
நாட்டிலுள்ள அனைத்தையும் அறிய வைக்கும் கருவி

மூச்சுக் காற்று உள்ளவரை வாசிப்பை
மூச்சு போல சுவாசிப்போம்
புத்தகம் எடுத்து வாசிப்போர் எவரும்
சிதறிப் போனதாக சரித்திரமே இல்லை

நாடகமான இவ்வுலகில் நடையறிந்து
வாழ வைப்பதும் வாசிப்பே வாசிப்பு
மனிதனை பூரணமாக்கும் வாசிப்பை நேசிப்போம், சுவாசிப்போம்






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனம் உண்டானால் இடம் உண்டு
# (வாசிப்பு மாதப்போட்டியில் முதலிடம் பெற்ற சிறுகதை)

செல்வி.வ.அஸ்வினி
தரம் 11
கிளி/ஞானிமடம் அ.த.க. பாடசாலை

தரம் 5 இல் கல்வி கற்கும் சாலினிக்கு புலமைப்பரிசில் பரீட்சையில் அகில இலங்கை ரீதியாக முதலாம் இடம் பெற்றமைக்காக அவளுக்கு இன்று பாராட்டு விழா நடைபெறவுள்ளதால் சாலினி அதிகாலை 5 மணிக்கு எழும்பி தனது உடைகளை தயார்படுத்தினாள். காரணம் அவளிற்கு தாய், தந்தை இல்லை அதனால் அவளை ஒரு அநாதை இல்லத்தில் ஒரு பெண் சேர்த்து விட்டார். அவர் தான் பாத்திமா என்ற அநாதை இல்ல கவனிப்பாளர். பின்பு சாலினி எல்லா வேலைகளையும் செய்துவிட்டு மீண்டும் நேரம் இருப்பதனால் நித்திரைக்குச் செல்கின்றாள். அப்போது அவளிற்கு நித்திரை வரவில்லை. அவள் தான் கல்வி கற்பதற்காக அனுபவித்த துன்பங்களையும் தனது தாய், தந்தை பற்றியும் மீண்டும் புரட்டிப் பார்த்தாள். அப்போது சாலினிக்கு 5 வயது. இவள் சிதம்பரம் என்ற ஊரில் தாய் ,தந்தையருடன் வாழ்ந்து வந்தாள். இவள் அப்பா அம்மாவிற்கு ஒரே ஒரு மகள் என்பதால் செல்லம் அதிகமாக இருந்தது. கேட்கின்ற பொருட்கள் அனைத்தையும் இவளிற்கு வாங்கிக் கொடுத்தனர். அதனால் இவள் மகிழ்ச்சியில் மூழ்கினாள். பின்பு ஒரு நாள் சாலினி பாடசாலையில் கல்விச் சுற்றுலா செல்வதற்காக தனது தாய், தந்தையரிடம் விடைபெற்றுச் சென்றாள். பின்பு சாலினி பூங்காவிற்குச் சென்று அங்குள்ள இடங்களைப் பார்வை இட்டாள். அப்போது அவளிற்கு தனது தாய், தந்தையரின் நினைவு வந்தது. ஏன் என்றால் தான் தனது தாய், தந்தையருடன் ஒருநாள் வரவேண்டும் என நினைத்தாள் எனவே எல்லா இடங்களையும் பார்வையிட்ட பின்னர் தனது பெற்றோருக்கு பழங்களையும் வாங்கிக் கொண்டு சென்றாள். பின்பு பேரூந்து அவளது வீட்டின் முன்பக்கத்தில் வீதி என்பதால் இறக்கி விட்டுச்சென்றது. சாலினி தனது தாய், தந்தையாரைக் காண்பதற்காக ஓடிச் சென்றாள் அவளது வீட்டின் புறத்தே மக்கள் தொகையாக நின்றனர். இவளிற்கு திக் என்று இருந்தது. உள்ளே ஓடிச் சென்றள் அப்போது அவளது தந்தை வீதி விபத்தில் இறந்ததாக கூறி எனது தாய் அழுது கொண்டிருந்தார்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவள் கொண்டு சென்ற பழங்கள் அங்கும் இங்கும் சிதறின. அவளது கனவுகளும் சிதறின. அவளது தாய் அவளை இறுக பிடித்து அணைத்துக் கொண்டாள். அப்போது அந்தச் சிறுமியின் மனம் வேதனைப்பட்டு துடித்தாள். அப்பா, அப்பா என்று கதறி அழுதாள். அவளது அப்பா இறப்பதற்கு காரணம் அவர்கள் வசிக்கும் இடத்தில் வைத்தியசாலை இல்லை. வைத்தியசாலைக்கு செல்ல வேண்டுமென்றால் 8Km தூரம் செல்ல வேண்டும். சாலினியினதும் அவளது தாயினது வாழ்க்கை வறுமையில் இருந்ததது. சிறிது காலம் உருண்டோடியது. அவளது தாயார் சாலினி நன்றாக கல்வி கற்க வேண்டும் என நினைத்து வெளிநாட்டில் பணிப்பெண்ணாக செல்லவுள்ளார். அப்போது சாலினிக்கு 7 வயது அவள் தனது தாயை இறுகப்பிடித்து அம்மா நான் அப்பாவையும் இழந்து விட்டேன். இனி உங்களையும் பிரிந்து என்னால் வாழ முடியாது என்று கெஞ்சி அழுதாள். அவளது தாய் அவளிற்கு ஆறுதல் கூறி நீ நன்றாக படிக்க வேண்டும். உனது அப்பாவின் கனவை நீ நிறைவேற்ற வேண்டும். நான் சிறிது காலம் அங்கு வேலை செய்து பணம் சேர்த்து மீண்டும் நாம் பணக்காரர் ஆகி எனது மகளுடனே இருப்பேன் என்று ஆசைக்கதைகளை கூறி அவளை ஒரு அநாதை இல்லத்தில் விட்டுச் சென்று விட்டார் சாலினியின் தாயார். சாலினி அந்தப் பாடசாலையில் கல்வி கற்கத் தொடங்கினாள். அவளிற்கு தாய் போல அன்புடன் வாசுகி என்ற பணிப்பெண் கவனித்து வந்தாள். சாலினிக்கு தந்தை இறந்து விட்டார், தாய் வெளிநாட்டிற்கு சென்று விட்டார் என்ற கவலையுடன் படித்து வந்தாள். பின்பு ஒருநாள் அவளது தாய் அவளைக் காண்பதற்காக வெளிநாட்டில் இருந்து வருவதாக சாலினி அறிந்து சந்தோசத்தில் துள்ளிக் குதித்தாள் அப்போது அவளது தாய் வந்து கொண்டிருக்கும் ரயிலும் இன்னொரு ரயிலும் மோதி தாய் இறந்து விட்டார். இதை அறிந்த சாலினிக்கு "பிஞ்சு நெஞ்சில் நெருப்பைக் கொழுத்தி விட்டது போல" இருந்தது. துன்பப்பட்டாள், துயரப்பட்டாள் அழுது புலம்பினாள். இவளது வாழ்வில் அடுத்தடுத்து துன்ப துயரங்கள் தலை விரித்தாடியது. இப்போது தரம் 5 இல் கல்வி கற்கின்றாள். தான் வெற்றி பெறுவதற்காக புலமைப்பரிசில் பரீட்சைக்காக பாடுபட்டு படித்தாள். அல்லும் பகலும் படித்தாள். தனது பெற்றோரின் ஆசையை நிறைவேற்ற வேண்டும் என நினைத்தாள். ஊண் உறக்கமின்றி மனந்தளர விடாது கற்றாள். புலமைப்பரீட்சைக்காக நேர அட்டவணைகளைக் குறித்து அதிகாலை எழுந்து கல்வி கற்றாள் மற்றும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடசாலை இடைவேளை நேரங்களிலும ஆசிரியரிடம் கேட்டறிந்தாள். பரீட்சைக்கு இரண்டு நாட்கள் உள்ளன என்பதால் மிகவும் கஸ்ரப்பட்டு படித்தாள். பரீட்சை அன்று அதிகாலை எழுந்து தாய், தந்தையரின் முன் அவர்களிடம் ஆசீர்வாதம் பெறும் பொருட்டு அவர்களது படங்களை தொட்டுக் கும்பிட்டுச் சென்றாள். பின்பு சிறிது காலம் கழித்து பரீட்சை முடிவு வந்தபோது சாலினி புலமைப்பரிசில் பரீட்சையில் அகில இலங்கை ரீதியாக 1ம் இடம் பெற்றார். இவள் மிகவும் சந்தோசம் அடைந்தாள். அதிபர், ஆசிரியர்கள் சக மாணவர்கள் அனைவரும் வாழ்த்தினர். இவள் மகிழ்ச்சியில் மிதந்தாள். இவ்வாறு நினைத்துக் கொண்டிருக்கும்போது பணிப்பெண் அவளை அழைத்தார். சாலினி கண்களை துடைத்து விட்டு வருகின்றேன் என்று கூறி பாராட்டு விழாவிற்கு தயாராகிச் சென்றாள். இந்தச்சிறுமி தாய், தந்தையை இழந்த துன்பத்துடன் மனந்தளர விடாது புலமைப்பரீட்சையில் சித்தி பெற வேண்டும் என நினைத்து கற்றாள் புலமைப்பரீட்சையில் சித்தி பெற்றார். எனவே இந்தச்சிறுமியின் மூலம் **"மனம் உண்டால் நிச்சயமாக இடம் உண்டு என்பதேயாகும்"** என்பதை உணரலாம்






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நல்லொழுக்கமிக்க சமுதாயத்தைக் கட்டியெழுப்புவதில் நூலகங்களின் பங்களிப்பு (வாசிப்பு மாதப்போட்டியில் முதலிடம் பெற்ற கட்டுரை)

செல்வி.சி.தனுஜா
தரம் 13
கிளி/பூநகரி மத்திய கல்லூரி

நூலகம் என்பது அறிவை வளர்க்கும் ஓர் இடமாகும். நூலகங்களின் மூலம் பல விடயங்களில் கற்றுக் கொள்ள முடிகின்றது. சஞ்சிகைகள், பத்திரிகைகள், மற்றும் பாடநூல்கள், அறிவு வளர்க்கும் தத்துவ நூல்கள் என்பனவற்றை நூலகங்களில் பெற்றுக்கொள்ள முடிகின்றது. நூல்கள் கல்வி என்னும் கடலில் கரைசேர வழிகாட்டும் கலங்கரை விளக்குகளாகும். எனவே நல்ல நூல்கள் நல்ல நண்பர்களாகும். நல்லொழுக்கமிக்க சமுதாயத்தை கட்டியெழுப்புவதில் நூலகங்கள் முக்கிய பங்கு வகிக்கின்றன என்பது அனைவரும் அறிந்த உண்மையாகும்.

**"புத்தகம் வாசித்தால் நீ புனிதனாவாய்**
**இல்லையேல் நீ மனிதனாகவே இருப்பாய்"**

நூலகங்களினால் நாம் அடையும் பயன்கள் கூறமுடியாத அளவு உள்ளன. நூல்களை வாசிப்பதனால் மனிதன் பூரணமடைகின்றான். அனைத்துப் பாடசாலைகளிலுமே நூலகங்கள் காணப்படுகின்றன. அவை மாணவர்களின் அறிவு வளர்ப்பதற்கும் கற்றலில் தேடலை உருவாக்குவதற்கும் பெரிதும் உதவுகின்றன. நூலகங்கள் இல்லையேல் மனிதன் மனிதனாகவே இருக்க முடியாது அந்த அளவிற்கு நூல்கள் முக்கியமானவையாக விளங்குகின்றன. நூல்களை கற்பதால் மன அமைதி, மற்றும் வாசிப்பு , ஆற்றல், தேடல், நுண்ணறிவிருத்தி ஆகியன ஏற்படுகின்றது.

**"நுண்ணறிவே ஆகுமாம் நூல் அறிவு"** என ஔவையார் கூறியுள்ளார். கல்வியின் வளர்ச்சிக்கும், அறிவின் வளர்ச்சிக்கும் நூலகங்களே பெரிதும் உதவுகின்றது. **"தான் தூக்கிலிடுவதற்கு ஒரு நிமிடம் முன்பு வரை வாசித்துக் கொண்டிருந்தவர் பகவத்சிங்"** அவரது நூல்கள் மீதுள்ள பற்று எவ்வளவாக இருந்திருக்கின்றது. சாவதற்கு ஒரு நிமிடம் முன்பு வரை அவர் வாசித்துக்கொண்டிருக்கிறார் அந்த அளவிற்கு நூல்கள் சக்தி வாய்ந்தது நூல்களின் மீது அவ்வளவு பற்று உண்டாயிருக்கிறது. நாமும் நூலகங்களிற்கு சென்று வாசிப்பதன் மூலம் பூமியில் நல்ல ஒரு அறிவுள்ள பூரணமான மனிதனாக முடியும் என்பதில் ஐயமில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**"நூல்கள் என்பது தேன்கூடு அதிலுள்ள ஒவ்வொரு நூல்களும் தேன் துளிகள்"**

நாம் அதனை கவனமாகக் கையாண்டு அறிவை வளர்த்துக் கொள்ளல் வேண்டும். நூலகங்கள் மனிதனுக்கு அறிவை மட்டுமல்ல ஆன்மீகத்தையும் கற்றுக்கொடுக்கின்றது. நூலகங்களில் ஆன்மீகம் சார்ந்த நூல்களும், தத்துவ நூல்களும் காணப்படுகின்றது. நூலகங்களில் நாம் பல பயனைப் பெறமுடியும் என்பது உறுதி.

**"வாசிப்பதன் மூலமே சிறந்த சமுதாயத்தை உருவாக்க முடியும்"** நூலகம் இல்லை எனில் சிறந்த சமுதாயத்தை உருவாக்குவது கடினம் வாசிப்பதன் மூலம் பலதரப்பட்ட ஆற்றல்கள் உண்டாகின்றது. அதுவே நாட்டில் நல்ல பிரஜையாக உருவாக்க வழிகாட்டுகின்றது. நல்லதொரு சமுதாயத்தை உருவாக்க வேண்டுமெனில் அது நூலகத்தால் மட்டுமே முடியும் அதனை அனைவருமே அறிந்து கொள்ளல் வேண்டும்.

நாம் நல்ல அறிவுள்ள மனிதனாக வாழ விரும்பினால் அது நூலகத்தால் மட்டுமே முடியும் நூலகம் சென்று நூல்கள், பத்திரிகைகள், வார நாளிதழ்கள், வரலாறு என்பவற்றை கற்று அதன்மூலம் நமது அறிவை வளர்த்துக் கொள்ளுதல் வேண்டும். நூல்கள் வாசிக்காதவர்கள் என்று யாருமே இருக்க முடியாது அனைவருமே அதனை கற்றுத்தான் ஆக வேண்டும். பாடசாலை செல்லும் ஒவ்வொரு மாணவர்களும் நூல்களை வாசித்துத்தான் ஆக வேண்டும் அதனால் மட்டும் அறிவு வளர்ந்திடாது நூலகத்திலுள்ள பலதரப்பட்ட நூல்களை வாசிப்பதன் மூலம் பல விடயங்களை கற்றுக்கொள்ள முடிகின்றது,

நூலகத்தினால் நாம் அடையும் நன்மைகளை நிறையவே கூறலாம் தேடல் ஏற்படுகின்றது. புதிய விடயங்களை அறிந்து கொள்ள முடிகின்றது. **"நல்ல புத்தகங்களை வாசிக்காதவன் புத்தகங்களை வாசிக்கத்தெரியாதவனையும் விட உயர்ந்தவன் என்று சொல்ல முடியாது"** எனவே நல்ல நூல்களை வாசிக்காதவன் வாசிக்கவே தெரியாதவனை விட தாழ்ந்தவனே ஆவான் நாம் நூல்களை வாசித்து உலகிலே நல்ல மனிதனாக வாழ வேண்டும். **"வாசிப்பை நாளும் நேசிப்பாய் நல்ல நூல் அனைத்தையுமே சுவாசிப்பாய் புதுப்பித்துக் கொள்ள நீயும் புத்தகம் வாசித்து பழகிடு"** அனைவருமே புத்தகம் வாசித்துப் பழக வேண்டும். புத்தகம் வாசித்தால் மட்டும் போதாது நல்ல நூல்களை வாசித்தல் வேண்டும். நூலகங்கள் சென்று வருவதற்கு நாளும் தவறிடக் கூடாது அங்கு நுண்மதி பெருக்கி வைக்கும் நூல்களையும் மறந்து விடக்கூடாது கற்பனை உலகிற்கே வகையிட்டுச் செல்லும் ஆற்றல் மிக்கது புத்தகங்களாகும். சாதிக்க வழி வகுப்பதும் நூல்களேயாகும். எனவே நாள்தோறும் நூலகம் சென்று நல்ல பல நூல்களைக் கற்று உலகிலே நல்ல பூரணமாக மனிதனாக வாழ வேண்டும் இவ்வாறு நல்லொழுக்கம் மிக்க சமுதாயத்தை கட்டியெழுப்புவதில் நூலகங்கள் சேவை புரிகின்றன. நூலகங்களே நமது வாழ்வின் ஒளிவிளக்கு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலக்கியங்களுக்குள் சிறுவர்களை ஈர்த்தல்

திருமதி.ம.அர்ச்சனா
தமிழ்பாட ஆசிரியர்
கிளி/நாச்சிக்குடா அ.மு.க பாடசாலை.

இலக்கியம் என்பது காலத்தினுடைய கண்ணாடி எமது பண்பாடுகளையும் பழக்க வழக்கங்களையும் எடுத்துச் சொல்கின்ற பெருமை உடையது. இவ்வாறான இலக்கியங்களைப் பேணிப் பாதுகாத்து அடுத்த தலைமுறைக்கு எடுத்துச் செல்கின்ற பொறுப்பு எங்களுடையது. இன்றைய சிறுவர்களையே அடுத்த தலைமுறையினர் என்கின்றோம். இன்றைய சிறுவர்கள் இலக்கியங்களில் ஈடுபாடற்றவர்களாக இருக்கின்றனர். இலக்கியங்களை சிறுவர்கள் விரும்பிக் கற்க வேண்டுமானால் நன்றாக எழுதவும் , வாசிக்கவும் பழக்க வேண்டும். இன்றைய சிறுவர்கள் தேர்வுகளுக்காகவே வாசிக்கின்றார்கள். தேர்வுகள் முடிந்தததும் வாசிப்பும் நின்று விடுகின்றது. பெற்றோர்களும் பிள்ளைகள் பரீட்சையில் அதிக புள்ளிகளைப் பெற்றாலே போதும் என நினைக்கின்றார்கள்.

சிறுவர்கள் நன்றாக வாசித்துப் பழகுவதற்காகக் கற்பனைகள் மற்றும் புத்தாக்க சிந்தனைகளை உடைய கதைகளைத் தேடி அறிந்து அவற்றை அவர்களுக்கு அறிமுகப்படுத்த வேண்டும். தற்போதைய காலகட்டத்தில் சிறுவர்களுக்கென எழுதப்பட்டுள்ள கதைகள், இலக்கியங்கள் என்பன குறைவாகவே உள்ளன. இன்றைய சிறுவர்களுக்குரிய கதைகளில் பெரும்பாலானவை பெரியவர்களுக்குரிய கதைகளின் எளிமைப்படுத்தப்பட்ட வடிவங்களாகும். இதுவரை காலமும் வெளியிடப்பட்ட அம்புலிமாமா, மரபுக்கதைகள், முல்லா நஸ்ருதீனின் கதைகள் என்பன இன்றைய சிறுவர்களுடைய அறிவு வளர்ச்சிக்கு உகந்ததாக இல்லை. ஆகவே இலக்கியக் கர்த்தாக்களும், சிறுகதை ஆசிரியர்களும் பிள்ளைகளின் அறிவு விருத்திக்கு ஈடாக சிறுவர் இலக்கியங்களைப் படைப்பதில் பெருமுயற்சி செய்கின்றார்கள். சிறுவர்களுக்கான புத்தகங்களை எழுதுகின்றபோது நீண்ட தொடர் வாக்கியங்களாக அமையாது எழுதுவது சிறந்ததாகும்.

ஏனெனில் அவற்றை வாசித்து பொருளறிந்து கொள்வது கடினமான விடயமாகும். எனவே அவர்கள் இலகுவில் பொருளையறிந்து கற்பதற்கு தகுந்த எளிமையான தனிவாக்கியங்களைக் கொண்டு அமைப்பது சாலச்சிறந்ததாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலக்கியங்களைப் பற்றி அறியாதவர்கள் தமது பண்பாடுகள், பழக்க வழக்கங்கள் தொடர்கள் எதுவுமே அறியாது வெறும் ஜடங்களாகவே வாழ்வார்கள் எமது எதிர்கால சந்ததியினரும் அவ்வாறு ஜடங்களாக வாழ்வதற்கு இடமளிக்கக் கூடாது என்பதற்காகவே புலம்பெயர் தமிழர்களும் உலகின் பல பாகங்களில் இருந்தும் பல்வேறு இலக்கிய ஆக்கங்களை வெளியிடுகின்றார்கள். இவ்வாறான இலக்கியங்களைப் படைப்பவர்கள் இன்றைய பிள்ளைகள் நாளைய விஞ்ஞான தொழில்நுட்ப உலகுக்கு வெற்றிகரமாக முகங்கொடுக்கக் கூடிய வகையில் விஞ்ஞானம், கலை இலக்கியம், கண்டுபிடிப்புகள் போன்ற அம்சங்களை உள்ளடக்குவது அவசியமாகும்.

இவை எல்லாவற்றுக்கும் மேலாக உரத்து வாசித்தல் மிகச் சிறந்தது என்று உளவியலாளர்கள் கூறியுள்ளனர். பெரியவர்கள் சிறுவர்களுக்கு உரத்து வாசித்துக் காட்டுவதனால் அவர்களுடைய மனதிலே அவை அதிகளவு பதிந்து விடும் என்று கூறப்படுகின்றது. இன்றைய இளைஞர்களும், முதியவர்களும் சிறுவர்களாக இருந்தவர்கள் தான். எனவே அவர்கள் தங்களுடைய அனுபவங்களையும் அபிப்பிராயங்களையும் சிறுவர்களுக்குக் கூறி இலக்கியங்களின் அவசியம் பற்றி உணர்த்த வேண்டும்.

பெரியவர்கள் அனைவரும் தங்கள் சிறார்கள் தினமும் பதினைந்து நிமிடங்களாவது உரத்து வாசிப்பதற்கு வழிகாட்ட வேண்டும். சிறுவர்கள் வாசிப்பை நேசிப்பதற்கான ஆர்வத்தை ஏற்படுத்த வேண்டும். இவ்வாறான செயற்பாடுகளை தொடர்ந்து மேற்கொண்டால் நிச்சயமாக சிறுவர்களுடைய வாழ்வில் முன்னேற்றம் உண்டாகும். சிறுவர்கள் இலக்கியங்களைக் கற்பதோடு மட்டும் நின்று விடாது இன்னும் பல புதிய இலக்கிய வடிவங்களையும் புரிந்து கொள்வார்கள். அத்துடன் இலக்கியங்களின் மூலம் வெளிப்படுத்ததப்படும் மனித விழுமியங்களைப் பேணுவதிலும் ஈடுபாடு கொள்வார்கள். எனவே சிறுவர்களை இலக்கிய வாசிப்பில் ஈர்ப்பது ஒவ்வொருவரதும் கடமையாக நினைத்து செயற்பட வேண்டும்.

**கல்வியின் பயன்**

எழுதரிது முன்னம் எழுதிய பின்னர்
பழுதறவா சிப்பரிது பண்பாய் - முழுதுமதைக்
கற்பரிது நற்பயனைக் காண்பரிது கண்டக்கால்
நிற்பரிது தானந் நிலை

(ஔவையார் தனிப்பாடல்)

- எழுதுவது அரிதான செயல்
- எழுதியபின்னர் அதைத் தவறின்றி வாசித்தல் அரிது
- வாசித்தாலும், பண்புடன் அதை முழுமையும் கற்றல் அரிது
- கற்றாலும் நற்பயனைக் காணல் அரிது
- கண்டுவிட்டாலும் அந்நிலையில் தளராமல் நிற்கும் மனவலிமையோடு இருப்பது அரிதிலும் அரிது.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அனுபவக் கல்வி [சிறுகதை]

திரு.சி.செல்வகுமார்(முகிலன்)
வலைப்பாடு

காலை வேளை கடமைகளை செய்வதற்காக கண்ணம்மா கண்விழித்து எழுந்தாள். அவளின் மனதில் உத்தேசமான கடிகார நேரத்தை நினைத்த படி எழுந்து மின்குமிழின் மின் அழுத்தியை அழுத்தினாள். தினமும் அவள் எழுந்து கடமை செய்வதால் நேரம் சரியாக 5.30 மணியாக இருந்தது. விரைந்து அடுப்பை ஊதி பற்ற வைத்து தேநீர் தயாரிக்க முற்பட்டவளாய் சற்று நிமிர்ந்து அடியெடுத்து தனது கணவனையும் மகனையும் பார்த்தாள். தன் மனதில் மகன் குமரனின் நினைவும் அவனின் எதிர்கால வாழ்வையும் அவளை அறியாமலே நிழலோடியது.

குமரன் சிறுவயதிலிருந்து கல்விக்காக தனது முன்னேற்றம் தன் கணவன் அவன் கேட்பதெல்லாம் பெற்றுக்கொடுக்கும் தன்மை ஆயினும் தந்தையின் கணீரென்ற வார்த்தைகள் அதனால் தினமும் கண்ணம்மாவின் முதுகிற்கு பின்னால் மறைந்து நின்று முனுமுனுக்கும் பழக்கம் அனைத்தும் அவள் மனதில் நியங்களாக ஓடியது. கணவன் நித்திரை விட்டு எழுவதும் தன் உடம்பை கை கால்களை அசைத்து உடல் அலுப்பை வெளிப்படுத்துதை கண்ணம்மா வேதனையால் பார்த்தாள். தினமும் தன் கணவன் தோட்டத்தில் வேலை செய்வது அயராத உழைப்பு அதற்காக தன் பிள்ளை குமரனும் கஸ்ரப்படக் கூடாது. தன்னால் கொடுக்கப்படும் சொத்து கல்வி தான் என்பதை நன்கு உணர்ந்தவர் தன் கணவன் என நினைத்தாள். படுக்கையில் எழுந்திருந்த கணவன் கந்தசாமி **"இஞ்ச கண்ணம்மா செம்பில தண்ணி கொஞ்சம் எடுத்து வாப்பா"** எனக் கூறி குமரனின் படுக்கை அறையை சற்று சரிந்து பார்த்தார். மகன் ஆழ்ந்த நித்திரையில் கிடப்பதைக்கண்டு **"கண்ணம்மா இஞ்ச ஏன் இவன் படிக்கேல்லையாமோ என்ன செய்யப் போறானாம்"** என்றதும் தந்தைக்கும் மகனுக்கும் அட்டமத்துச் சனி என்பதை உணர்தவளாய் **"கொஞ்சம் பொறுங்கோப்பா பிள்ளை எழும்பிருவான்"** என்று கந்தசாமியின் குரலுக்கு அஞ்சி பதறியடித்து படுக்கை அறை கதவை அடைத்து மகனுடன் இரகசியம் பேசுவது போல் மெதுவாக தாய் குமரனிக் போர்வையை விலக்கி **"ஐயா பிள்ளை எழும்பிப் படியையா"** என கைகளால் தடவினாள். குமரன் முனுமுனுத்துக் கொண்டு எழுந்து தந்தைக்காக படிப்பதைப் போன்று கையில் அகப்பட்ட புத்தகத்தை விழித்திருந்து படிப்பான். தனது கல்விக்காக தினமும் இவன் வீட்டில் நடக்கும் சிறு குழப்பம். மகனின் கல்விச் சிறப்பிற்காக தன் கணவனின் மனதை கண்ணம்மா நன்கு அறிந்தவளாய் குமரனுக்கு நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புத்திமதிகள் சொல்லி வருவாள். க.பொ.த சாதாரண தரப் பரீட்சை நெருங்கி வர பாடசாலைக் கல்வி வேளை தவிர்ந்து மாலை நேரக் கல்விக்கும் மகனை தயார்படுத்தி கண்ணம்மா அனுப்புவதை கந்தசாமி தோட்டத்தில் நின்ற படி வீட்டுவாசலை உற்று நோக்கிப் பார்ப்பான். தன்னை பரீட்சைக்காக தயார்ப்படுத்தியவனாக பரீட்சையை எழுதி காத்திருக்க இடையிடையே தந்தைக்கு தோட்டத்தில் உதவி செய்யும் பழக்கத்தையும் கந்தசாமி கண்ணம்மாவிற்கு ஊடாக ஊட்ட கற்றுக்கொடுத்தான்.

தோட்டத்தில் பிடுங்கப்பட்ட காய்கறி வகைகளை எடுத்து சென்று சந்தையில் நல்ல விலைக்கு விற்பனை செய்வதற்காய் மகனிடம் தொலைபேசியூடாக கந்தசாமி சந்தைகளை இனங்காட்டுவதையும் கண்ணம்மா நினைத்து பூரிப்படைந்தாள் சிறிது காலம் செல்ல பரீட்சைப் பெறுபேறு வந்தடைய குமரன் அந்தப் பாடசாலையில் முன்நிலைப் பெறுபேறைப் பெற்றுக் கொள்ள ஆசிரியர்கள் தொலைபேசியூடாகவும் நேரிலும் கந்தசாமியை வாழ்த்துவதும் அனைத்தும் குமரனின் நல் வாழ்விற்கே என நினைத்து குறைந்த புள்ளியுடைய பாடங்களை வீட்டில் நின்ற படி குமரனின் காதில் கேட்கும் படி முயற்சி செய்தால் ஏன் முடியாது எனும் கருத்தில் எடுத்துக் கூற குமரன் தன் மனதில் தந்தை தன்னை நச்சரிப்பது என நினைத்து கண்ணம்மாவிடம் சமையல் அறையில் சென்று தந்தைக்கு கேட்காது வாதாடினான். தாயும் தந்தையின் ஆசையை குமரனுக்கு நன்கு குற்றமின்றி புரிய வைத்தாள். வீட்டை அழகுபடுத்தும் பூமரக்கன்றுகள் நீர்பாய்ச்சி பாத்தி நிறைந்து வெளியேறும் மேலதிக நீரைக்கண்டு நீர்க்குழாயை நிறுத்துமாறு உரத்த குரலில் கந்தசாமி சத்தமிடுவதும் குமரன் வெறுப்புடன் குழாய் நீரை நிறுத்தி தந்தையை நிமிர்ந்து பார்க்காது செல்வதும் வீட்டின் முன் வந்தவுடன் பாதணிகளை ஒருபுறமாக வைத்து வருமாறு கந்தசாமி கூறுவதும் தேவையின்றி மின்குமிழ் பகலில் ஒழிர்வதை நிறுத்துமாறு குமரனை கூறியதும் குமரன் முனுமுனுத்தபடி ஆளிகளை மூடுவதும் தமது வீட்டுவாசலில் உள்ள மிதிபலகையை இயலுமானவரை சுத்தப்படுத்தி சீர்செய்து போடுமாறு தந்தை கத்துவதும் குமரனின் மனதில் தினமும் வேதனையையும் ஏற்படுத்துவதும் கண்ணம்மா நன்கு அறிந்தவளாய் குமரனை அணைத்துச் சொல்லி திடப்படுத்துவாள். உயர்கல்வி பரீட்சை எழுதிய குமரன் சில காலம் காத்திருக்க பரீட்சைப்பெறுபேறுகளும் வெளிவர அவன் சித்தி எய்தினான். ஆயினும் பல்கலைக்கழகம், அல்லது கல்லூரி செல்ல முடியாதுவேதனை அடைந்து தன் தந்தைக்குப் பயந்தவனாக வீட்டின் கதவைத் திறந்து வர கந்தசாமி **"கண்ணம்மா என்றதும் ஒரு கனம்"** மனம் பட படக்க, மீண்டும் கந்தசாமி அன்பாக பிள்ளைக்குத் தேநீர் கொடுக்கும் படி கூறினான். குமரன் அழுதான் தந்தை அருகே சென்றிருந்து தலையை தன் விரல்களால் கோதி தன் வியர்வை படிந்த நெஞ்சுடன் அணைத்து உச்சந்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


தலையில் முத்தமிட்டார். குமரனின் கண்களிலும் கண்ணம்மாவின் கண்களிலும் மடை திறந்த வெள்ளம் போல் கண்ணீர் பாய்ந்தது. கந்தசாமி தன் கைகளால் குமரனிக் கண்களைத் துடைத்து வீட்டினுள் அழைத்துச் சென்று இருக்கையில் அமர்த்தி நல்ல அறிவுரைகளைக் கூறினான்.

காலம் கடந்தோட கந்தசாமி கண்ணம்மாவிடம் மகனை கணணிக்கல்வி ஆங்கிலக் கல்வி கற்க அனுப்புமாறு கூறுவதும் அதனை கண்ணம்மா குமரனிடம் எடுத்துச் சொல்வதும் வழி அனுப்பி திரும்பும் வரை விழி மேல் விழி வைத்துப் பார்த்திருப்பாள். அத்தனையும் அறிந்தும் குமரன் தன் அறிவுப் பயிற்சிகளை நிறைவு செய்து தன் தந்தைக்கு உதவியாக சிறு வேலைகள் செய்வதிலும் அதனைக் காட்டிக் கொள்ளாது கந்தசாமி வேதனை அடைவதும் கண்ணம்மா தட்டிக் கொடுப்பதும் படித்த கல்விக்கான ஒரு வேலை ஒன்றைத் தேடுமாறு கந்தசாமி குமரனிடம் மெதுவாக கூறுவார். நாளும் பத்திரிகையைப் பார்க்கும் போது கந்தசாமி உடனே வேலைவாய்ப்பு பகுதியைத் திறப்பதை குமரன் அறிந்து கொள்வதும் குமரனின் பார்வைக்காக அதனைக் காட்சிப்படுத்துவதையும் அறிந்தவனாய் தனியார் அரசுடன் இணைந்த நிறுவனம் ஒன்றின் வேலைவாய்ப்பகான விண்ணப்பம் கோரப்பட்டதைப் பார்த்து அதனைப் பூர்த்தி செய்து அனுப்பினான். பின்னர் எனது கல்விக்கு சரி வருமா என்றதை விட பல்கலை கற்றவர்கள் அவ்வளவு வருவார்கள் என நினைத்த படி பெருமூச்சு விடுவான். சில நாட்களில் விண்ணப்பித்தமைக்கான நேர்முகத் தேர்விக்காய் சென்றவனாய் பெரிய முதலாளித்துவக் கம்பனி துவிச்சக்கரவண்டியில் சென்றவன் சரியாக நேர்முகத் தேர்விற்கு 10 நிமிடங்கள் முன் சென்ற போது நூற்றுக்கனக்கான உந்துருளிகள் மோட்டார்க் கார்களில் நேர்முகத்தேர்விக்கு தன்னைப் போல் வந்தவர்களைக் கண்டு ஆச்சரியப்பட்டான். தானொரு சாதாரண ஆளாக எண்ணி முன் கதவின் காவலாளியிடம் தன் பெயரைக் கூறி புன்முறுவலில் கதைத்து உள்நுழைந்து காவலாளியின் பதிவுப் புத்தகத்தில் தன் ஒப்பமிட்டு சிறிது தூரம் செல்ல பூங்கன்றிற்காக பாய்ச்சப்பட்ட நீர் பாத்தி இறைத்து வெளியில் செல்வதைக் கண்டு உடனே அந்த குழாயை எடுத்து அடுத்த பாத்திக்கு மாற்றி மீண்டும் அடியெடுத்துச் சென்றான். மண்டப வாசலில் சென்ற போது பகல்வேளையில் மின்குமிழ்கள் எரிவது அவன் கண்ணுக்குத் தெரிந்தது. உடனே சென்று அதன் ஆழிகளை மூடினான். 'பின்னர் தயங்கியவாறு காலெடுத்து படியில் வைக்க கால்மிதி நிறைந்த மண்ணுடன் தலைகீழாக நல்வரவு என்ற வசனம் கிடந்ததை மீண்டும் அதனை உதறி சீர் செய்து வைத்து உள்ளே சென்று நேர்முகத் தேர்விற்கு தோற்றவுள்ளவர் நிறைந்துள்ள மண்டபத்தில் அனைவருக்கும் வணக்கம் கூறி அவருக்கான தொடரிலக்கம் 96 எடுத்துக் கொண்டு உள் நுழைந்து நேர்முகத் தேர்வு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடத்துபவரிடம் தன்னை அறிமுகம் செய்ய அவர் உடனே நிறுத்துங்கள் நீங்கள் எப்போது வேலைக்கு வருவீர்கள்? என்றது தன்னை ஏளனம் செய்கிறாரா என்று நினைத்து என்ன சேர் என்றான் இயக்குனர் உங்கள் நடவடிக்கை அனைத்தையும் இந்தக் கமராக்கள் ஊடாக கவனித்திருந்தேன். இவரும் உடனே உங்களுக்கான நியமனக்கடிதம் நாளை பெற்றுக் கொள்ளவும் எனக் கூறியதும் குமரனின் கண்களில் ஆனந்தக் கண்ணீர் நிறைந்தது. உடனே மீளவும் இயக்குனர் கல்வி கண்காணிப்பு எடுத்துக்காட்டு அனைத்தும் தான் கம்பனியை உயர்வடையச் செய்யும் என்றதும் அவனுக்கு தந்தையின் நினைவு வந்தது. மனதை திடப்படுத்திக் கொண்டு காவலாளிக்குப் பதில் கூறி மீண்டும் வீடு வந்தவனாய் தனது தந்தை கந்தசாமியைத் தேடினான். தோட்டத்தில் வியர்வை சிந்த மண்வெட்டியுடனும் மண்ணுடனும் போராடுவதைக் கண்டு ஒடிச் சென்று கந்தசாமியின் கால்களை இறுகப்பற்றி அழுதான். கந்தசாமி புன்னகையில் கட்டி அணைத்து தன் வியர்வை மூச்சுடன் முத்தமிட தந்தையின் உறுத்தல் தன் வாழ்வை எந்தளவிற்கு கொண்டு சென்றது. அனுபவக் கல்வி அளவிடமுடியாது என நினைத்து மகிழ்ச்சியில் தன் நண்பனுடன் தொலைபேசியில் பேச நினைத்து அழைப்பைத் தொடுக்க நண்பனின் தொலைபேசியிலிருந்து ஏற்ப அழைப்புக்குப் பதிலாக **"அந்த வானுக்கு இரண்டு தீபங்கள் அவை தாயொடு தந்தையரோ."** எனப் பாடல் தொடர தந்தையைப் பார்த்து மீண்டும் விம்மி விம்மி இரு கை கூப்பி ஆனந்தக் கண்ணீர் சிந்தி நின்றான்.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாசிப்பின் மகத்துவம்

திருமதி. ராஜினி ராஜேஸ்கண்ணா
இசை ஆசிரியர்
கிளி/நாச்சிக்குடா அ.மு.க. பாடசாலை

கல்வி என்பது வாழ்க்கையின் உயிர்நாடி. இறைக்க இறைக்கக் கிணறு ஊறும் கற்கக் கற்க அறிவு மேலும் வளரும். நல்லவற்றைக் கற்று மக்கள் நலம் பெற வேண்டும். கல்வியின் நோக்கம் சமநிலை ஆளுமை கொண்ட சமூகத்தை உருவாக்குவதாகவும், வாழ்க்கையோடு இசைந்ததாகவும், சமுதாய எழுச்சியை மையமாகக் கொண்டதாகவும் இருத்தல் வேண்டும்.

வெறும் ஏட்டுக்கல்வியாக, இயந்திர மயமானதாகப் பட்டங்களையும் பெறுபேறுகளையும் மையமாகக் கொண்டதாகக் கல்வி இருத்தல் கூடாது. உள்ளதை உள்ளபடி உணரும் பரந்துபட்ட அறிவும் எந் நிலையிலும் எவருக்கும் அடிமைப்படாத உறுதிப்பாடும் அறிவின் மேம்பட்ட நிலைப்பாடாகும். நாளுக்கு நாள் புதுமை வளர்க்கும் நாகரீக மாறுபாடும் சமூக மேம்பாடும் கொண்டதாக கல்வி இருத்தல் வேண்டும். வையத்தில் வாழ்வாங்கு வாழ்வதற்கும் வாழ்விப்பதற்கும் கல்வி உதவ வேண்டும்.

இவ்வாறான சிறந்த கல்வி நிலையை மாணவர்கள் அடைவதற்கு வெறும் பாடப்புத்தகங்கள் மட்டும் ஏற்புடையனவாகாது. பாடப்புத்தகங்களோடு மட்டும் உள்ளவர்கள் வெறும் புத்தகப் பூச்சிகள் என்றே கற்றோரால் அடையாளப் படுத்தப்படுவதைக் காணலாம். பாடப்புத்தகங்கள், பாடம் சம்பந்தமான அறிவை மட்டுமே மாணவர்களுக்குக் கொடுக்கின்றது. பரந்துபட்ட கல்விப் பயன்பாடும் தெளிந்த சிந்தனையும் சமுதாய ஒருங்கிசைவும், மக்கள் நேர்த்தி கொண்ட அறிவும் உலக நிலைப்பாட்டை அறிவதற்கும் வாசிப்பு மிகவும் அவசியமானது.

வாசிப்பு என்பது இசையை வாசிப்பது, நூல்கள், செய்தித்தாள்கள் வாசிப்பது என்று பல வகையான கருத்து வெளிப்பாடுடையதாக இருப்பினும் வாசிப்பவர்கள் பலவகையான நோக்கங்களுக்காக வாசிக்கின்றார்கள். நாளாந்தம் சில குறிப்பிட்ட செய்திகளை அறிந்து கொள்ளவும், அறிவுத் தேடலுக்காகவும் வர்த்தகத்தை நோக்கமாகக் கொண்டும் பொழுதைப் போக்குவதற்கும் கௌரவத்திற்காகவும் வாசிக்கின்றார்கள். எது எவ்வாறாயினும் வாசிப்பின் மூலமாக அவரவர் நோக்கங்களுக்கான பயனை அடைந்து கொள்கின்றார்கள் என்பதே உண்மையாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நூல்களை வாசிப்பதன் மூலம் மனிதன் பலவகையான நன்மைகளை அடைந்து கொள்கின்றான். வாசிப்பு ஒருவனை முழுமையான மனிதனாக்குகின்றது. வாசிப்பதன் மூலம் அறிவு வளம் பெறுகின்றது. ஆற்றல் பெருகுகின்றது, நம்பிக்கை ஏற்படுகின்றது. உடல் உள நோய் குணமாகின்றது. எல்லாவற்றிற்கும் மேலான நீண்டகாலம் உயிர்வாழ்வதற்கான ஆயுட்காலம் அதிகரிக்கின்றது என்றும் அண்மையில் செய்யப்பட்ட ஆய்வின் மூலம் அறியப்படுகின்றது.

உயர்கல்வி மேம்பாட்டுக்குப் பொது அறிவு, பொது உளச்சார்பு என்பன முக்கிய இடம் பெறுவதாகக் கருதப்படுகின்றது. ஆனால் வகுப்பறைக் கல்வி மட்டும் இவற்றுக்கு ஏற்புடையன அல்ல தினசரிகளில் அரசியல் நிலை தற்காலம் சிந்தனை, கல்வி நிலை, நவயுகம், சமுதாய நிலைப்பாடு, சமூகசீர்கேடுகள் பற்றிய கருத்துக்களைச் சான்றோர் திறம்பட வெளியிடுகின்றார்கள். அந்தத் திறமை அவர்களுடைய வாசிப்புத் திறனாலும், சிறந்த கிரகிப்புத் திறனாலும் வந்ததே அன்றி வேறல்ல.

சிறந்த மேன்மையான சமுதாய ஒத்திசைவான வழிகாட்டக்கூடிய பரந்துபட்ட அறிவைப் பெறுவதற்குப் பத்திரிகைகள், சஞ்சிகைகள் புதுவித ஆக்கங்கள் கொண்ட சிறந்த நூல்கள் போன்றவை மக்கள் அறிவு வளர்ச்சிக்கும், புதுமை நோக்குக்கும் இன்றியமையாதவையாகும். **"[கண்டது கற்க] கண்டு அதுகற்கப் பண்டிதனாவான்"** என்பது பழமொழி அதாவது வாழ்க்கை முன்னேற்றத்துக்கு எதுநல்லறிவைக் கொடுக்குமோ அதைத் தெரிந்து கற்பவனே அறிஞனாவான். கற்பது மட்டுமின்றிக் கற்றதன்படி ஒழுகுதல் வேண்டும்.

பாலோடு நீர் கலந்து வைத்தால் பாலை மட்டும் அருந்தும் அன்னப்பறவை போல நாமும் நல்லவற்றைத் தெரிந்து கற்க வேண்டும். சிறந்த நூல்களும் ஆசிரியர்களே. பத்திரிகைகள், நூல்கள், சஞ்சிகைகள் மாணவர்களது அறிவு வளர்ச்சிக்கும் உள மேம்பாட்டுக்கும் இன்றியமையாதவை. ஆனால் தற்போது மாணவர்களதும், மக்களினதும் மனதைக் கெடுக்கின்ற திரைப்படங்கள், தரங்கெட்ட சஞ்சிகைகள் ஏராளமாக வெளிவருகின்றன. இவை பணத்தை மட்டுமே குறிக்கோளாகக் கொண்ட செயற்பாடே அன்றி மாணவர், பொதுமக்கள் மனதைப் பற்றியோ சமுதாய முன்னேற்றத்தைப் பற்றியோ, மனித விழுமியங்களைப் பற்றியோ சிந்திப்பவையல்ல. இப்படியான வெளிப்பாடுகளினால் சமூகச் சீர்குலைவையும் மனிதநேயமற்ற தன்மையையுமே காணக்கூடியதாக இருப்பதைச் சமகாலத்தில் நடைபெறும் குற்றச்செயல்களைக் கொண்டே நாம் உணர்ந்து கொள்ள முடிகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவை எல்லாவற்றையும் கடந்து வாசிப்புப் பழக்கத்தை நாம் ஏற்படுத்திக் கொள்ள வேண்டுமெனில் முதலில் நேரத்தைத் திட்டமிட்டு செயலாற்றலுக்குரியதாக மாற்றமுறச் செய்யப் பழகிக்கொள்ள வேண்டும். தினமும் நேர அட்டவணையில் வாசிப்புக்கென்று தனியான நேர கால அளவிடையை உருவாக்கிக் குறித்துக்கொள்ள வேண்டும். அந்த நேர ஒழுங்கின்படி செயற்பட வேண்டும். வாசிப்பு நேரத்தில் அமைதியாக ஆசுவாசமாக அமர்ந்திருந்து ஆழமான விடயங்களை வாசித்தறிதல் வேண்டும்.

சிலருக்குச் சத்தமிட்டு வாசிப்பு ஏதுவான சூழ்நிலையாக அமைந்திருக்கும். அச் சூழ்நிலையை இயைபாக்கமாக அனுசரித்துக் கொண்டு வாசிக்க வேண்டும். அதுவே முக்கியமான விடயமாகும். இங்கு வாசிப்பு பழக்கமானது ஒரு மனிதனைப் பூரணத்துவமுடையவனாக மாற்றிவிடும். பொறுமை, அமைதி, நிதானம், அறிவு முதலிய பல விடயங்களைக் கற்றுத் தருகின்றது. எழுத்தாற்றலை விரிவடையச் செய்கின்றது.
எனவே வாசிப்பு என்பது மாணவர்களின் கல்வியிலும் ஏனையவர்களின் வாழ்விலும் உயர் நிலையை அடைவதற்குச் சிறந்த ஊடகமாகத் திகழ்கின்றது. வாசிக்காதவன் மனதில் அறியாமை என்னும் தூசி படியும் **"நுண்ணறிவு வேண்டின் நூலோடு பழகு"** என்பதற்கிணங்க நூல்கள்தான் வாழ்வின் படிக்கற்கள் என்பதை உணர்ந்து நல்லவற்றை வாசித்து வாழ்வை அனைவரும் வளம் பெறச் செய்வோம்.

**"வாசிப்பு என் சுவாசிப்பு**
**வாசிப்பே உன் நேசிப்பு**
**வாசிப்பை நேசி**
**வாசிப்போம் அதை நேசிப்போம்"**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொது அறிவு

செல்வி.பி.மானஷா
தரம் 07A
கிளி/பூநகரி மத்திய கல்லூரி

1. இலங்கையின் தேசிய கீத உபகரணம்?

   றபான்

2. மங்குஸ்தானுக்கு பிரசித்தமான இடம்?

   கம்பஹா

3. உடம்பில் பட்டால் சொறிவை ஏற்படுத்தும் தாவரம்?

   காஞ்சொறி

4. மஞ்சள் நிறக்கொடி குறிப்பது?

   தொற்றுநோய்

5. வானவில் மாலையில் தோன்றும் திசை?

   கிழக்கு

6. உலகில் குறைந்த சனத்தொகை கொண்ட நாடு எது?

   வத்திகான்

7. தாவரங்கள் இரவில் வெளிவிடும் வாயு?

   காபனீரொட்சைட்

8. மயிர்க்கொட்டியின் முதிர்ச்சி பருவம் எது?

   வண்ணாத்துப்பூச்சி

9. காற்றின் வேகத்தை அறிய உதவுவது எது?

   காற்று வேகமானி

10. துங்கிந்த நீர்வீழ்ச்சி அமைந்துள்ள இடம்?

    பதுளை

11. உலகின் மிகப்பெரிய சமுத்திரம் எது?

    பசுபிக் சமுத்திரம்

12. குளத்தில் நீரைத் திறந்துவிடும் இடம் எது?

    கலிங்கல்தொட்டி

13. உலக புத்தக தினம் எப்போது?

    ஏப்ரல் 23

14. கட்டிப்பால் தொழிற்சாலை அமைந்துள்ள இடம் எது?

    பொலநறுவை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

15. இலங்கையில் முதன்முதலாகத் தொலைக்காட்சி சேவை ஆரம்பிக்கப்பட்ட ஆண்டு எது?

1979

16. சேனநாயக்க சமுத்திரம் அமைந்துள்ள மாவட்டம் எது?

அம்பாறை

17. தேசிய கொடியில் சிங்கத்தின் உடல் பிரதிபலிப்பது?

வீரம்

18. மின்சார பல்புகளில் நிரப்பப்படும் வாயு?

ஆர்கன்

19. ஒளி புகக்கூடிய இரண்டு சோடி இறகுகள் உள்ள பூச்சி எது?

தும்பி

20. தையல் வேலை செய்வோர் துணிகளில் ஓரங்களை வரைய பயன்படுவது எது?

சுவடுவரைசில்லு



எங்கே தங்க விரும்புகிறீர்கள் என்று லண்டன் தோழர்கள் கேட்டபோது... எது நூலகத்திற்கு அருகில் உள்ளது என கேட்டாராம்

டாக்டர் அம்பேத்கர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அறிவுகளின் சங்கமம்

செல்வன்.கி.கிரிஷாந்தன்(பூநகர் சாந்)
கறுக்காய்தீவு,
பூநகரி.

அறிஞர்களின் ஆக்கங்கள் பல
அறிவியலின் சங்கமமாய் ஓர் இடத்தில்
வாகைக்கு பலம் சேர்ப்பதற்காய்
வார்த்தைகளின் ஒன்றிப்பின் இணைப்புக்கள்

எண்ணற்ற கற்பனைகள் காவியங்கள்
எம் மனதினில் வாசித்து பதிந்திடவே
அறிவுகளின் சங்கமமாய் அடுக்குகளாய்
அறைகள் பல நிறைந்து வாசகர்களுக்காய்

நூற்றாண்டுகள் பல கடந்தாலும்
நூலகமாய் கற்போரின் ஆசானாய்
திறன்களை வளர்த்திடும் களஞ்சியம்
திறமையாளனை உயர்த்திடும் ஏணி

ஞானக்கண்ணை திறந்திடும்
ஞாலம் போற்றிட வாழ்ந்திட உதவும்
புத்தகங்களை எடுத்து படிக்கையிலே
புரட்சியாய் மனதினிலே சில வெளிப்பாடுகள்

கவிஞர்களை உலகிற்கு அறிமுகமாக்கும்
கலை எழுத்தாளர்களை பிரசவிக்கும்
மனதிற்கு இனிமையாய் புதிய நண்பனாய்
மடமையை நீக்கி மகிமையை உணர்த்திடும்
மாற்றங்களை உருவாக்கிடும் சங்கமம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்க்கைக்கு வழிகாட்டுவது நூல்களே

திரு.பொன்.தில்லைநாதன்
(ஓய்வு நிலை அதிபர்)
பொது நூலக ஆலோசனைக் குழு உறுப்பினர், பூநகரி

**"கண்டது கற்கப் பண்டிதனாவான்"** என்பது முதுமொழி இது ஆன்றோர் வாக்கும் கூட எம் மாணவச் செல்வங்கள் இன்று இம்முதுமொழியின் உண்மைத் தன்மையை சற்றும் உணராது, மதியாது வாசிப்பதில் சற்றும் தம் சிந்தனையைச் செலுத்தாது தம் கவனத்தை நவீன விஞ்ஞான சாதனங்களில் செலுத்தி வருதலும் பொழுதுபோக்குவதும் கவலைக்குரியது. வாசி..... யோசி..... விசுவாசி என்கிற சொற்பதங்களின் கருத்தை நன்கு உணர்ந்து செயற்பட்டால் வாசிப்பு மனிதனை பக்குவமடையச் செய்து முழுமையுள்ளவனாக மாற்றி நல்ல அறிவு, திறன், மனப்பாங்கு, கொண்டவனாக மாற்றும் என்பது உறுதி.

உலகில் எது மாறினாலும் மாறாதது மாற்றம்தான் என்னும் சொல்லை மாற்றி விட்டன நூல்கள் உலகிலே மாறாதது நூல்கள் தரும் அறிவு எத்தனை எத்தனை ஆண்டுகள் சென்றாலும் மனித வாழ்க்கைக்கு வழிகாட்டுவது நூல்களே எமது வாழ்க்கையே ஒரு மாயமானது இவ்வாழ்க்கைப் பாதையில் வெற்றியும், தோல்வியும் சகஜமானது. இம்மாயமான வாழ்க்கையில் எமது வாழ்க்கைக் கடலை நீச்சலடித்துக்கடக்க உதவி, நின்று வழிகாட்டுவது மாயமற்ற தோணிதான் நூல்கள்.

இவ்வையகத்தில் மாபெரும் அறிஞர்களாய் திகழ்ந்த காந்தி, அப்துல்கலாம், நெப்போலியன், கிட்லர், கால்மாக்ஸ், பீல்கேட்ஸ் மாற்றியமைத்தது நூல்கள் என்னும் அறிவுப் பொக்கிசங்களே.

எம்மாணவச் செல்வங்களில் எத்தனை பேர் நம் பிரதேசங்களில் நம் பாடசாலைகளில் இயங்கும் நூலகங்களில் தம் பொன்னான நேரத்தைச் செலவிடுகிறார்கள் என்பதை ஆராய்ந்தால் வெளிச்சத்துக்கு வரும் விடயம் கவலைக்குரியதாகவே இருக்கின்றது. பல இலட்சக்கணக்கான ரூபாக்களை செலவிட்டு கொள்வனவு செய்யப்பட்டு அலுமாரிகளிலும், விறாக்கைகளிலும் அடுக்கி வைக்கப்பட்டிருக்கும் அரிய பொக்கிசங்களான அறிஞர்கள் நூல்கள் தூசி பிடித்து காணப்படும் நிலையை கல்வியலாளர்கள், புத்தி ஜீவிகள் எவரும் ஏற்றுக்கொள்ள மாட்டார்கள்.

அன்புக்குரிய பெற்றோர்கள், கல்விச் சமூகத்தினர், நலன் விரும்பிகள் யாவரும் எத்தனை ஆயிரம் ஆண்டுகள் சென்றாலும் மனித வாழ்க்கைக்கு வழிகாட்டும் நூல்களில் ஆர்வத்தை ஏற்படுத்தி ஊக்குவித்து நல்ல ஒரு சமுதாய வளர்ச்சிக்கு வித்திட திடசங்கற்பம் பூணுவோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வியக்க வைக்கும் தமிழர் அறிவியல்

Miss.P.Kamsika
University of Jaffna
4th Mail Post
Poonakary

பழந்தமிழர் உணவு, உடை, அறிவியல், மருத்துவம், விளையாட்டு முதலான செய்திகள் குறித்து விரிவாக விளக்கும் நூல் வியக்க வைக்கும் தமிழர் அறிவியல்.

சித்தர் என்ற சொல்லுக்கு சித்தமானவர்கள் என்றும் பொருள் உண்டு. அவர்கள் அறிவியலை ஞானமாக்கியவர்கள். அவர்கள் மனித வாழ்க்கைக்குச் சித்தமானதைக் கண்டு சொன்னார்கள். உணவை உண்பதில் மருத்துவம் சார்ந்த நெறிமுறைகளை ஏற்படுத்தினார்கள் சுக வாழ்வுக்காக அறிவியல் ரீதியான சில வழக்கங்களை ஏற்படுத்தினார்கள். அவ்வாறு வந்துதான் மனிதனின் தலைமுடி அளவு குறைவாய் இருத்தல். ஆரோக்கியமானது என்பது அவர்களின் கண்டுபிடிப்பு. மேலை நாடுகளில் பெரும்பாலான ஆண்கள் தலையில் அதிக முடியையும் பெரிய மீசையையும் வைப்பதே இல்லை.

ஆடவர்கள் இடுப்பில் கட்டுகிற அரைஞான் கயிறு ஒரு நோய் தடுப்பு முறையா வந்திருக்கின்றது என்பது இன்று பலருக்குதெரியாது. ஆடவர்களுக்குப் பொதுவாக குடல் இறக்க நோய் வருவதுண்டு அந்நோயைத் தடுக்கவே இடுப்பில் அரைஞான் கயிறு முன்பெல்லாம் கட்டுகிற பழக்கம் தமிழர்களிடையை இருந்தது. பிறகு அக்கயிறு வெள்ளிக் கொடியாக மாறியது. இன்றைக்கு அநாகரீகம் எனக்கருதி அரைஞான் கயிறு கட்டுவதும் குறைந்து விட்டது. பெண்களுக்கு மிககுறைந்த அளவிலேயே இந்நோய் வரும் என்பதால் அவர்கள் அரைஞான் கயிறு கட்டுவதில்லை.

தாய்பால் குழந்தைகளுக்கு மிக அவசியம் எனக் கண்டவர்கள் பழந்தமிழர்கள். தாய்ப்பாலைத் தவிர வேறு எந்தப் பாலுமே அதற்கு ஈடாகாது. இன்றைக்கு மேல் நாடுகளில் தாய்ப்பால் குழந்தைகளுக்கு கொடுக்கும்படி வலியுறுத்தி வருகின்றார்கள். ஆடும், மாடும், நாயும் தாய்ப்பாலைத் தம் குட்டிகளுக்குக் கொடுக்கின்ற போது மனிதர்கள் மட்டும் ஏன் மாற்றுப்பால், மாட்டுப்பால் கொடுக்கின்றார்கள். குழந்தை பிறந்ததும் இயற்கையாகவே தாயின் மார்பில் பால் சுரக்கும். அது குழந்தைகள் குடிக்கத்தான். அதனை கொடுக்காமல் விடுவது அழகு நல்லது என்றும் நினைக்கின்றார்கள் சிலர் ஆனால் இவ்வாறு பெற்ற குழந்தைக்கும் பால் கொடுக்காமல் விடுவதால் மார்பகப்புற்றுநோய் வருகிறதாம் கர்ப்பம் தரிக்காமல் இருக்க இயற்கைக்கு எதிராக ஊசி போட்டு கொள்கின்றார்கள். மாத்திரை சாப்பிடுகின்றார்கள். இவற்றால் உடலில் பக்க விளைவுகள் ஏற்படும். ஆனால் இந்த உடலிலே கர்ப்பம் தரிக்காமல் இருக்க இயற்கையான முறையில் சில வழிகளை சொல்லியிருக்கின்றது.

வாரத்தில் ஒருநாள் மாதத்தில் பல நாள் பட்டினி(சில நோயாளர்கள் தவிர்ந்த) இருப்பது உடலுக்கு நல்லது என்பது பழந்தமிழன் மருத்துவம் பட்டினி இருப்பதால் உடலில் உள்ள நச்சுக்களை வெளியேற்ற முடிகிறது. நோய் எதிர்ப்பாற்றலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மிகுதிப்படுத்தலாம். நோய்கிருமிகளை பரவாமல் தடுக்கலாம். உடலில் உள்ள மோசமான கிருமிகளை அழிக்கலாம் என்பது ஒரு தன்னம்பிக்கை இவற்றை நினைவில் கொண்டுதான் தவஞானிகள் உண்ணாவிரத்தையும், பேசாவிரதத்தையும் ஒருநாள் (வாரம் ஒருமுறை) பின்பற்றினார்கள். அதிகாலையில் துயில் எழுதல் உடல் நலத்திற்கு நல்லது. நீண்ட வயது வாழ்ந்தவர்கள் பெரும்பாலானவர்கள் அதிகாலையில் எழுபவர்களாகத்தான் இருப்பார்கள். அதிகாலையில் காற்று தூய்மையாக இருக்கும். சுத்தமான பிராணவாயு தெருக்களில் அப்போது கிடைக்கும்.

குறிப்பாக மார்கழி, தை மாதங்களில் மிக நல்ல தரமான பிராணவாயு கிடைக்கும். இது பூமி சுழற்சியினால் ஏற்படும் செயல் எனவே தான் இதனை சுவாசிக்கும் பொருட்டு ஆண்கள் மார்கழி பஜனைக்குப் போக வைக்கப்பட்டார்கள். பெண்களை வீட்டு வாசலில் கோலம் போட வைத்தார்கள்.

கோலம் போடுவது பண்பாட்டு மரபு அதே நேரத்தில் நம் கண்களுக்கு தெரியாத சிறிய உயிரனங்களுக்கு உணவு கொடை இடுவது முக்கியமானது. ஆனால் இன்று தானிய மாவைத் தவிர்த்து வெள்ளைக்கல்லை அரைத்து மாவாக்கி கோலம் போடுகின்றார்கள். இதனால் எறும்புகள் நமக்கு தெரியுமா என்ன? அதே நேரத்தில் இந்த வெள்ளைக்கல் மாவு காற்றிலே கலந்து மனிதர்களின் மூச்சிலே இணைந்து நலத்திற்கு கேடு விளைவிக்கும். எத்தனை பேர் இதனை உணர்ந்தோம்.

நம்மை அறியாமலே நம் தெருக்களில் வளரும் வேப்பிலை மரம் செய்யும் நன்மை தெரியுமா? அது காற்றைத் தூய்மைப்படுத்துகின்றது, நிழல் தருகின்றது, தொற்று நோய்களை தடுக்க உதவுகிறது, அம்மை நோய்களை கண்டவர்களுக்கு வேப்பிலை படுக்கை சுகமானது, வயிற்றுப்புண், குஸ்டம், சக்கரை நோய்களுக்கு அதன் இலைகள் அருமருந்து. எனவே தான் தமிழர்களோடு வேப்பமரம் மிக நெருங்கிய தொடர்பு கொண்டிருக்கின்றது.

வில்வ இலையில் மருத்துவம் இருக்கிறது. உடலில் உள்ள ஐம்பூதங்களை சமநிலைப்படுவது அதன் தீர்த்தம் எனவே தான் சில கோயில்களில் வில்வ இலைத்தீர்த்தம் வழங்கப்படுகின்றது. வாழைப்பழம் புத்திசாலிகள் சாப்பிடும் பழம், ஏழைகளின் ஆப்பிள் உண்பவருக்கு பல நன்மைகள் இப்பழத்தால் கிடைக்கின்றன. அதே போன்ற அந்த பழம் தரும் வாழைமரம் தமிழர்களின் பண்பாட்டு மரமாயிருக்கிறது. அதன் இலையில் உண்பது சுவைக்கு மட்டுமல்ல நலத்திற்கும் உதவுகின்றது. சுற்றுப்புறச் சூழலுக்கும் நண்பனாக இருக்கிறது. தொடர்ந்து வாழை இலையில் உண்பவர்களின் கண்களுக்கு புத்துணர்ச்சி கிடைக்கும். இதன் தண்டுகள் சிறுநீர்க்கல் அடைப்புக்களை நீக்கும் எனவே தான் மருந்தாக பயன்படுகிற மரங்களைப் பழந்தமிழர் வீட்டுத்தோட்டத்திற்குள் கொண்டு வந்தனர்.

தமிழன் வீட்டுத் தோட்டத்து மரங்கள், செடிகள், கொடிகள் உணவிற்கும், மருந்திற்கும் பயன்படுகின்றன. ஆனால் இன்றைய மேல்நாட்டு நிர்வாகத்தில் வெறும் அழகுக்கு முன்னுரிமை கொடுக்கப்பட்ட மரஞ்செடி கொடிகளே வீட்டுத்தோட்டத்தில் இருக்கின்றன. வீட்டுத்தோட்டத்தில் கறிவேப்பிலை இருந்தால் சாம்பாருக்கு உதவும். இஞ்சிச் செடியில் செரிமானத்துக்கு உதவும். மஞ்சள் செடியின் மஞ்சள் பூசிக் குளிக்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதவும். மஞ்சள் ஒரு சிறந்த கிருமி நாசினி ஆகவேதான் மஞ்சள் தூளைத் தண்ணீருக்குள் கரைத்து விட்டு வாசலில் தெளிப்பார்கள். கிராமத்து திருவிழாக்களில் மஞ்சள் நீராடுதல் ஒரு அர்த்தத்தோடு வந்ததுதான்.

வீட்டுத்தோட்டத்தில் நிற்கும் முருங்கைக்கீரை ஆண்மையை பெருக்கும். கீழாநெல்லி மஞ்சள் காமாலை நோய்க்கு அருமருந்தாகும். அந்த மருந்து ஆங்கில மருந்தை விட பலனை அள்ளித்தரவல்லது. அதன் சக்தி உணர்ந்த மேல்நாட்டு விஞ்ஞானிகள் கீழாநெல்லியை மாத்திரையாக்கி கொண்டு வந்துள்ளனர். இது தமிழர் மருத்துவத்திற்கு கிடைத்த அங்கீகாரமாகும்.

தமிழர் மருத்துவமாகிய சித்த மருத்துவம் 2,50,000 மூலிகைகளைக் கொண்டு மருத்துவம் பேசுகிறது. இவற்றை நாம் ஆங்கில மருந்து என்பவற்றை மட்டும் நம்பிக் கொண்டு புரிந்து கொள்ளாதது பெரிய தவறு. சித்த மருத்துவம் பக்க விளைவு அல்லது பின் விளைவு இல்லாத மருத்துவம் இந்த நாட்டின் இயற்கைச் சூழலுக்கேற்ப தட்ப வெப்ப நிலைக்கேற்ப இயற்கையாகக் கொண்டு தயாரிக்கப்படும் மருந்துகளே அவைகள்.

அதே நேரத்தில் இயற்கை விதிகளுக்குட்பட்டு இயற்கை நெறியோடு உணவினை உண்ணுவதே உடலுக்கு நலம் சேர்க்கும் என்கிறது சித்த மருத்துவம். எனவே தமிழ்ச் சித்தர்களின் சித்த மருத்துவத்தைப் பயன்படுத்தச் சித்தமானால் அது நம்மை நிச்சயம் வாழ வைக்கும்.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாசிப்பின் முக்கியத்துவம்

திருமதி.குகானந் சுபாஜினி
தெளிகரை,
பூநகரி.

ஒரு மனிதன் வாசிப்பதன் மூலமான தனது அறிவினை மேலும் மேலும் விருத்தி செய்து கொள்ளலாம். ஒரு மனிதனுக்கு உலகில் நடக்கின்ற நல்ல பல நிகழ்வுகளை அறிந்து கொள்வதற்கு வாசிப்பு மிகவும் அவசியமானது ஆகும். இன்றைய உலகில் ஏற்படுகின்ற நிகழ்வுகள் அனைத்தையும் எமக்கு இலகுவாக அறிந்து கொள்ள வாசிப்பு மிகவும் அவசியமான ஒன்றாகும். வாசிக்க தெரியாதவர்கள் உலகில் என்ன நடக்கின்றது உலகம் எந்த யுகத்தை நோக்கி நகர்ந்து கொண்டு இருக்கின்றது என்பதை பற்றி அறியாமல் இருந்து விடுவார்கள்.

ஒவ்வொருவரும் எழுத்தினை சரியாக உச்சரித்து வாசித்தல் வேண்டும். ஒரு சிறிய எழுத்தினை மாற்றி வாசித்தல் மூலமாக அதன் கருத்தே மாறுவதற்கான சந்தர்ப்பங்கள் பல உண்டு. இதனால் சரியான முறையில் உச்சரித்து வாசித்தல் வேண்டும். நேரத்தினை வீணாக செலவழித்தல் கூடாது, அதனை நாம் பயனுள்ள வகையில் செலவு செய்யலாம். எமது அன்றாட வாழ்வில் எத்தனையோ நிகழ்வுகள் நடைபெறுகின்றது. அவற்றை நாம் வாசிப்பதன் மூலம் அறியலாம். தினசரி பத்திரிகையை வாசிக்கும் பழக்கம் உடையவர்கள் பொது அறிவில் மேம்பட்டவர்களாக இருப்பார்கள் என்பது பலரின் கருத்து ஆகும்.

ஒருவர் வாசிக்காதபோது மௌனித்து போகின்றான் என்ற கூற்று உண்மையான ஒரு விடயம் ஆகும். அதாவது வாசிக்க தெரியாதவன் நன்கு வாதாடும் திறமை பெற்றவனாகவும் காணப்படுகின்றான்.

மத ரீதியாக எடுத்து நோக்குவோம் ஆயின் கிறிஸ்தவர்கள் தமது வேதநூலான **“பைபிள்”** நன்றாக வாசித்து அறிந்து கொள்ள வேண்டியவர்களாக இருக்கின்றார்கள். தமது திருப்பலியில் அவர்கள் வாசிக்க வேண்டும். அதன்மூலம் அவர்களின் வாசிப்பு திறனை அதிகரிப்பதற்கு ஒரு ஊக்குவிப்பாக அமைகின்றது. அதேபோன்று தான் ஒவ்வொரு மதமும் தமது சமயத்தவர்களின் வாசிப்பை ஊக்குவிப்பதாக அமைகின்றது. சைவ சமயத்தவர்களின் வேதநூலாக **“பகவத்கீதை”** காணப்படுகின்றது. அதனை அவர்கள் வாசிப்பார்கள். தேவாரம் பாடுவதன் மூலமாகவும் அவர்களின் வாசிப்பு திறனை வளர்க்கும் ஒரு ஊக்குவிப்பாக மதம் அமைகின்றது. அதேபோன்று முஸ்லீம்கள் **“குர்ஆன்”** ஓதுதல் என்பது முக்கியமாக கருதப்படுகின்றது. இதன்மூலம் மதங்களில் வாசித்தல் பிரதானமாக நடைபெறுவதன் மூலமாக வாசித்தல் ஒரு பிரதான நிகழ்வு என்பதனை நாம் அறியலாம்.

சிறு வயதில் இருந்து வாசிப்பினை ஊக்குவிக்கும் வகையில் நூலகங்களுக்கு சென்று வாசிப்பதற்கும் அவர்களுக்கு தேடல் கல்வியை வழங்குதல் வேண்டும். பத்திரிகையில் வருகின்ற சிறுகதை, பொது அறிவு விடயங்கள் என்பவற்றை சேகரித்து அதனை வாசிப்பதற்காக மாணவர்களுக்கு ஆசிரியர்கள் அறிவுறுத்தல் வழங்குதல் என்பவற்றின் மூலம் வாசிப்பில் நன்கு தேர்ச்சி பெற முடியும்.

ஒரு ஊரிலே பலகோயில் இருப்பதைவிட பல நூலகங்கள் இருத்தல் வேண்டும். நூலகம் மாணவர்களின் வாசிப்பை தூண்டும். அவர்களுக்கு வாசிப்பதற்கு துணையாக அமைகிறது. நாம் அனைவரும் எமது வாசிப்பை வாசிப்பு மாதத்தில் மேலும் மேலும் வளர்த்து கொள்வோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# புத்தகம் வாசித்தல்

செல்வன்.பி.யோசுவா
தரம்: 04A
கிளி/பூநகரி மத்திய கல்லூரி

புத்தகம் வாசித்தல் நல்ல பொழுதுபோக்காகும்.
கதைப்புத்தங்கள் வாசித்தல் எனக்கு மிகவும் விருப்பமாகும்.
தினமும் நான் கதைப்புத்ததங்கள் வாசிப்பேன்.
எனது உண்மையான நண்பர்கள் புத்தகங்கள் ஆகும்.
அவை எம் அறிவு வளர்ச்சிக்கு உதவுகின்றன.

## Reading Books

Reading books is a good hobby
I Like to read story books
Every day I read a story book
Books are our true friends
They give us knowledge.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாசிப்பினால் உயர்ந்த அறிவியல் மேதைகள்

செல்வி. ரஜீன்குமார் விதுசா
தரம் -11
கிளி/ஸ்ரீ விக்கினேஸ்வரா வித்தியாலயம்
பூநகரி

இன்றைய நவீன விஞ்ஞான உலகில் எங்கு பார்க்கிலும் என்னைப் போன்ற பள்ளி மாணவர்கள் நவீன கட்புல, செவிப்புல சாதனங்களிலேயே தமது பொன்னான நேரத்தைச் செலவிட்டு அதனுள் மூழ்கிக் கிடப்பது எமது எதிர்கால வாழ்க்கையை பாழாக்குகின்றோம் என்று சற்றும் சிந்தியாமல் இருப்பது எங்கள் தலையிலேயே நாம் மண்ணைப் போடுவதற்குகொப்பாகும்.

நல்லதொரு தலைவர்களையே இன்றைய சமூகம் எதிர்பார்த்து நிற்கின்றது. இளமைப் பருவத்திலேயே எம் மாணவர்கள் மத்தியில் எதிர்பார்க்கும் தலைவர்களையும், சாதனையாளர்களையும் இம்மண்ணில் உருவாக்க முடியும்.

வெற்றியாளர்கள், சாதனையாளர்கள் வரலாற்றை நாம் அலசி ஆராய்ந்து பார்ப்போமானால் எமக்கு ஒரு தெளிவான உண்மை புலப்படும் இன்று சாதனையாளராக உயர்ந்து நிற்கும் ஒவ்வொரு வரையும் வானுயரவைத்தது வாசிப்புப் பழக்கமே என்பதில் எதுவித ஐயமுமில்லை.

இந்த வகையிலே நூல்களோடு பிறந்து நூல்களோடு வளர்ந்த மிக முக்கியமான தத்துவஞானி ரூசோ அறியாமை என்னும் புதைகுழியில் மூழ்கியிருந்த மக்களை வெளிக் கொண்டு வந்தார் ரூசோ. இவர் முறையாகச் சென்று பள்ளியில் படிக்கவில்லை இவருக்கு ஏழு வயதாய் இருக்கும் போதே தந்தை நல்ல நூல்களைப் படிக்கும் பழக்கத்தை ஏற்படுத்தினார். இதனால் இளம் வயதிலேயே நல்ல நூல்களை விரும்பி வாசிக்கும் நல்ல பழக்கம் ஏற்பட்டது. தந்தையும், மகனும் நேரம் போவது தெரியாமலே வாசித்துக் கொண்டேயிருப்பார்கள். கிரேக்க நாட்டு காவியங்களை படித்த ரூசோவின் மனது சிறந்த எழுத்தாளனாக வர வேண்டும் என்ற அவா தோன்றியது. கடைசியில் அவரது எண்ணம் ஈடேற வாசிப்பு பழக்கமே காரணமாய் அமைந்ததெனலாம்.

அமெரிக்க சிந்தனையாளர் ஜான்டுயி அறிஞர்களின் வரலாறுகளை படிப்பதில் ஆர்வம் கொண்டார். அதன் பயனாக உலகம் போற்றும் சிறந்த அறிஞரானார்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதேபோல அமெரிக்க ஜனாதிபதியாய் இருந்த ஆபிரகாம் லிங்கன், கெனடி இளமைக் காலத்தில் அறிவியல் மேதைகளின் வரலாற்றை படித்து உயர்ந்தவர்கள் அல்லவா. அதற்கு காரணம் அவர்களது வாசிப்பு பழக்கமே.

அமெரிக்காவில் பிறந்த புகழ் பெற்ற விஞ்ஞானி தோமஸ் அல்வா எடிசன் சிறு வயது முதலே வாசிப்பில் ஆர்வம் கொண்டு கிடைக்கும் சிறுதொகை பணத்திற்கு கூட நூல்களை வாங்கி வாசிப்பதிலேயே செலவிட்டார். அவர் அறிவில் உயர்ந்து மேதையாக வரவில்லையா? வாசிப்பு பழக்கம் இருந்தால் இவ்வுலகை ஆளலாம் என்பதற்கு இவர்கள் போன்ற மேதைகளே உதாரணம். ஆங்கில இலக்கிய மேதை பேர்னாட்ஷோ ஏழு வயதிலேயே சேக்ஸ்பியரின் நாடகங்கள், அரபுக்கதைகள் போன்றவற்றை தொடர்ச்சியாக படித்தார். அறிவியல் மேதையாக உயர்ந்தார். வாசிப்பு எமக்கு தரும் நன்மைகளுக்கு அளவே இல்லை. சாதனையாளர்களின் சரித்திரங்களை தேடி வாசிப்பதினால் எமது கனவு நனவாக வழிபிறக்கும் என்பது திண்ணம்.

## "முயற்சி திருவினையாக்கும்"






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பணிவே வலிமை

செல்வி.பு.புவியரசி,
கிளி/ஞானிடம் அ.த.க.பாடசாலை.

ஒருநாள் தந்தையும் மகனும் ஆற்றங்கரை ஓரமாகச் சென்று கொண்டிருந்தார்கள். அங்கே ஒரு பெரிய ஆலமரம் தலை நிமிர்ந்து நின்று சிறு சிறு காற்றுக்கு எல்லாம் ஆடிக்கொண்டிருந்ததது.

இரண்டையும் பார்த்த மகன் **"அப்பா ! அந்த ஆலமரத்தைப் பாருங்கள் எந்தக் காற்றுக்கும் அஞ்சாமல் தலை நிமிர்ந்து நிற்கின்றது. ஆனால் பக்கத்தில் உள்ள மூங்கிலோ காற்றுத் தாக்கம் ஏற்படும் போதெல்லாம் எப்படி வளைகின்றது. இருந்தால் ஆலமரமாக இருக்க வேண்டும் மூங்கிலாக இருக்க கூடாது"** என்றான்.

இதைக் கேட்ட அவர் ஏதும் பேசவில்லை இருவரும் வீடு வந்து சேர்ந்தனர்.

ஒரு வாரத்திற்குள் அந்த ஊரைக் பெரும் சூறைக்காற்று தாக்கியது. வீடுகளின் கூரைகள் பறந்தன. மரங்கள் வேரோடு சாய்ந்தன. சூறைக்காற்று வீசி ஓய்ந்தது.. தந்தையும், மகனும் பாதுகாப்பான இடத்தில் தங்கி இருந்தனர்.

**"மகனே! அன்று ஆல மரத்தையும், மூங்கிலையும் ஒப்பிட்டுப் பேசினாயே அவை இரண்டிலும் ஏது இந்தச் சூறைக்காற்றுக்குத் தாக்குப் பிடித்திருக்கும்? சொல்"** என்று கேட்டார் தந்தை.

**"சந்தேகம் என்ன ஆலமரம்தான் இந்த நேரம் இந்த மூங்கில் வேரோடு பறிக்கப்பட்டு எங்காவது பறந்து இருக்கும்"** என்றான் அவன்.

**"சரி! வா நாம் இருவரும் அங்கே சென்று பார்ப்போம்"** என்றார் தந்தை. இருவரும் ஆற்றங்கரையை அடைந்தனர். என்ன வியப்பு ! எதுவுமே நடவாதது போல அந்த மூங்கில் காற்றில் அசைந்தாடிக் கொண்டிருந்ததது. ஆனால் ஆலமரமோ வேரோடு சாய்து தரையில் விழுந்து கிடந்தது.

**"என்னப்பா! நான் நினைத்தற்கு எதிர்மாறாக இங்கு நடந்து உள்ளதே"** என்று வினவினான் மகன். **"வலிமை வாய்ந்த ஆலமரமும் வலிமை இல்லாத மூங்கிலும் சூறைக்காற்றைச் சந்தித்தன. ஆலமரம் வேரோடு பிடுங்கப்பட்டுக் கிடக்கிறது. மூங்கிலுக்கோ எந்த தீங்கும் நிகழவில்லை. ஏன் என்று புரிகிறதா? ஆலமரத்திடம் பணிவு இல்லை மூங்கிலிடமே அது இருந்தது. பணிவு உடையவர்கள் எந்தச் சூழலிலும் எந்தக் காலத்திலும் தாக்குப்பிடித்து நிற்பார்கள்"** என்று விளக்கம் தந்தார் தந்தை.

எனவே மாணவர்களாகிய எம்மிடம் எப்போதும் பணிவு இருக்க வேண்டும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புத்தகம்


செல்வி.தமிழ்ச்செல்வன் தேனுஜா
செட்டியக்குறிச்சி
பூநகரி

உலகைப் பந்தாய் கைகளில் ஏந்தி
உருளச் செய்து காட்டிடுமே
எம் அறிவில் சிறந்த புத்தகம்

வாழ்க்கையின் மேடு பள்ளத்தையும்
நல்லறிவையும் எமக்கு சொல்லித்தந்து
எம்மை சிறந்த மனிதனாக மாற்றிடும்
எம் வாழ்க்கை வழிகாட்டி புத்தகம்

சிறுவர் முதல் பெரியோர் வரை
நற் பண்புகளை புகட்டி
நற் பிரஜையயாக வாழ வைக்கும்
அறிவின் கலசம் புத்தகம்

சிறுவர் விரும்பும் கதைகளை
மனங்கவரும் படங்களுடன்
வாசிப்பு உணர்வினை தூண்டும்
அறிவுப் பெட்டகம் புத்தகம்






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உடலில் உள்ள கொழுப்பைக் கரைக்கும் சூரிய போதா பிராணயாமம்

செல்வி.ப.ஹரீத்தனா
முகாமைத்துவ உதவியாளர்
பிரதேச சபை, பூநகரி.

❖ பெயர் விளக்கம்

**"சூரிய"** என்றால் **"சூரியன்"** என்றும் **"போதா"** என்றால் **" அடைப்புக்களை நீக்கி போதல்"** என்றும் பொருள்படுகிறது. இந்தப் பயிற்சி பிங்களா நாடி சூரிய நாடியில் உள்ள அடைப்பை நீக்கி, அந்த நாடியில் பிராண சஞ்சாரத்தை மிகைப்படுத்துவதால் இந்தப் பெயரில் அமைந்துள்ளது.

❖ செய்முறை

அனுகூலமான தியான ஆசனத்தில் அமரவும். இரு கைகளையும் நீட்டி முழங்கால்களின் மேல் கைவிரல்களால் சின் முத்திரை செய்யவும். கண்களை மூடவும், உடல் முழுவதையும் தளர்வாக வைத்துக் கொள்ளவும்.

வலது கையை மடக்கி, விரல்களால் நாச்சக்கர முத்திரை செய்யவும். இடது நாசியை ஆள்காட்டி சிறுவிரல்களால் அடைத்து வலது நாசி வழியாக மூச்சுக்காற்றை முழுவதுமாக வெளியே விடவும். வலது நாசியின் வழியாக மூச்சுக்காற்கை முடிந்த அளவுக்கு உள்ளுக்கு இழுக்கவும். இடது நாசி அடைத்த படியே இருக்கட்டும்.

வலது நாசியையும் கட்டை விரலால் அடைக்கவும். இப்போது இரண்டு நாசியும் மூடியபடி இருக்கட்டும். ஒரிரு வினாடிகள் அப்பிடியே இருக்கவும். வலது நாசியை அடைத்து வைத்திருந்த கட்டை விரலை எடுத்து வலது நாசியின் வழியாக மூச்சை வெளியே விடவும். இது ஒரு சுற்றுப் பயிற்சியாகும். ஆரம்பத்தில் 5 முதல் 10 சுற்று பயிற்சி செய்யவும். தொடர்ந்து பயிற்சியில் சுற்றுக்களை அதிகரித்துக் கொண்டு போய் 15 முதல் 30 சுற்று வரை செய்யலாம்.

❖ கவனம் செலுத்த வேண்டிய இடம்

சுவாச இயக்கத்தின் மீதும் மணிப்பூர சக்கரத்தின் மீதும் கவனம் செலுத்தவும்.

❖ பயிற்சிக்குறிப்பு

இந்தப்பயிற்சியிலும் வலது நாசியின் வழியாக மட்டும் மூச்சுக்காற்றை உள்ளுக்கு இழுத்து வெளியே விட வேண்டும். இப்படி பயிற்சியின் தொடக்கத்தில் இருந்து முடியும் வரை இடது, நாசி, ஆள்காட்டி, சிறு விரல்களால் மூடியபடியே இருக்கட்டும்.

❖ தடைக்குறிப்பு

இருதய கோளாறு, உயர்குருதி அமுக்கம், காக்கா வலிப்பு, மனப்படபடப்பு




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மற்றும் அமில பித்தம் போன்ற பித்த சம்பந்தமான கோளாறுகள் உள்ளவர்கள் செய்யக்கூடாது.

❖ பயன்கள்

உடலில் பிராண சக்தி மிகும், வெப்பம் அதிகரிக்கும் எல்லாவிதமாக வாத நோய்களுக்கும் நன்மை அளிக்கிறது. ஜலதோசம் போன்ற கப சம்பந்தமாக கோளாறுகள் நீங்கும். வயிறு குடலிலுள்ள கிருமிகள் அழியும். இருமல் , சீதளத்தால் உண்டாகும் தலைவலி குணமாகும். ஜீரண சக்தி அதிகரிக்கும். சிம்படிக் நரம்பு மண்டலத்தை பிங்காளா நாடி தூண்டி செயல்படுத்துவதனால் இந்தப் பயிற்சியினால் குருதி ஓட்டம் விரைவடைந்து, சோம்பலை நீக்கி உடலைச் சுறுசுறுப்படையச் செய்கிறது. மனதை விழிப்புடன் இருக்கச் செய்கிறது. மனதை விழிப்புடன் இருக்கச் செய்கிறது, குறைந்த குருதி அழுத்த நோயாளிகளுக்கு பயனுள்ளது. உடலில் உள்ள கொழுப்பு கரைந்து உடல் எடை குறையும்.







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# உலகின் வித்தியாசமான நூலகங்கள்

செல்வி.சு.பிரதீபா
B.A.(Hons)
பிரதேச சபை, பூநகரி

01. சென்டிரல் நூலகம் : சியெட்டல் : வாசிங்டன்



02. டிரினிட்டி பல்கலைக்கழக நூலகம் : டப்லின் ஜர்லந்து



பழமையான கட்டடமாக இருந்தாலும் இதன் சூழலை விரும்புவோர் பலர் கிட்டத்தட்ட 200 ஆயிரத்துக்கு மேலான புத்தகங்கள் இங்கே உண்டு. 1592 ஆம் ஆண்டு முதலாம் எலிசபெத் அரசியார் நூலகத்தை நிறுவினார். இரண்டாம் எலிசபெத் அரசியார் கடந்த ஆண்டு நூலகத்தைப் பார்வையிட்டார்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

03. கலிபோர்னியா பல்கலைக்கழக நூலகம். சென் டியாகொ



வினோதமான வடிவமைப்பைக்கொண்டது. இந்த நூலகம் கையில் புத்தகங்களை ஏந்துவது போல வடிவமைக்கப்பட்டுள்ளது. 7மில்லியனுக்கும் மேற்பட்ட பலதரப்பட்ட நூல்கள் இங்கு கிடைக்கும்.

04. தி யு டெல்/ப்ட் நூலகம் நொர்லாந்து




இந்த நூலகத்தைச் சுற்றி பசுமையான புல்வெளி உள்ளது. அதற்கென தனித்துவம் வாய்ந்த ஒரு அரும்பொருளகமும் உண்டு. நூலகம் தரைக்கு கீழ் கட்டப்பட்டிருப்பதே இதன் சிறப்பம்சம்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

05. பிப்லியோதிக எலெக்ஸாண்டா எலெக்ஸண்டிரியா எகிப்து.



கிரேக்க காலத்தின் போது மாவீரர் அலெக்ஸ்சாண்டரால் கட்டப்பட்டது. 2002 ஆம் ஆண்டு மறுசீரமைக்கப்பட்டது. இந்த நூலகம் ஒரு நவீன கலைப்படைப்பாக பார்க்கப்படுகிறது.

06. ஸ்டட்கர்ட் நகர நூலகம்: ஸ்டட்கர்ட், ஜெர்மனி





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

07. பீஷான் பொது நூலகம், சிங்கப்பூர்



மரவீட்டினைப் பிரதிபலிக்கும் கட்டடம் எளிமையும் புதுமையும் கலந்த வடிவமைப்பு 4000 சதுரமீற்றர் பரப்பளவு கண்ணாடி யன்னல்கள் கொண்ட நூலகம் என்ற விருது பெற்றுள்ளது.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலட்சிய வாழ்வு

செல்வி.கு.புகழினி
தரம் 07
கிளி/ஞானிமடம் அ.த.க.பாடசாலை
பூநகரி.

இலட்சியம் என்பது இல்லாமல்
இயற்கையான சுகங்களை
இளமையிலே தொலைத்தவன்

மனிதனாகப் பிறந்தவன்
மனிதனாக வாழவே- ஆறறிவு
உதவுவது பகுத்தறிவைத் துணைக்
கொண்டு இலட்சியமாய் வாழ்ந்திட்டால்
பரந்த இந்த உலகமே

இலட்சியத்தைத் துணைக்கொண்டு
வீறுநடை போட்டிட்டால்
விரிந்த இந்த உலகத்தில்
வெல்வதற்கு ஒன்றுமில்லை.

இலட்சியத்தை வகுத்தவனே
இனிய நல்ல மனிதனாம்
மாணவர்கள் நாங்களே
இலட்சியத்தை உருவாக்கி

இலட்சிய புருஷர்கள் ஆவோமே
இலட்சியம் எங்களிடம் இருந்தால்
இனிமை எம்மைத் தேடிவரும்
இலட்சியம் இல்லா வாழ்வு
சுவையில்லாத ஓட்டம் போல

மாணவர்கள் ஆன எமக்கு
இலட்சியம் இனிப்பு போல
இலட்சியத்தை நோக்கி பயணித்து
இனிமையாக வாழ்வோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஏர்னெஸ்ற்றோ சேகுவேரா எனப்படும் சே – புரட்சியின் சூரியன்
# "நான் சாகடிக்கப்படலாம் ஆனால் ஒருபோதும் தோற்கடிக்கப்படமாட்டேன்"

திருமதி. நிருஜா போல் தர்ஷாந்
இணைய ஊடகவியலாளர்

உலகம் முழுவதும் எத்தனையோ புரட்சிகள் இடம்பெற்று அவை வரலாற்றில் தடம்பதித்தாலும் புரட்சியாளன் என்றவுடன் வரலாற்றில் நீங்காது ஒலிக்கும் உன்னதமான ஒற்றை நாமத்திற்கு சொந்தக்காரர் ஏர்னெஸ்ற்றோ சேகுவேரா எனப்படும் சே என்ற மாபெரும் புரட்சியாளனே.

ஒட்டுமொத்த உலகில் கண்டத்துக்கு கண்டம், நாட்டக்கு நாடு புரட்சிகள் வேறுபட்டாலும் புரட்சியாளர்கள் என்று தம்மை அடையாளப்படுத்தும் அனைவருக்கும் முகவரி சே என்பதே வரலாறு எமக்கு கற்றுத் தந்த பாடம்.

புரட்சிகன் வெற்றியடைந்த வரலாறு உண்டு மறுமுனையில் தோல்வியடைந்த வரலாறும் உண்டு. ஆனால் புரட்சியாளன் ஒருவன் வீரமரணத்திலேயே வெற்றியடைகின்றான் என்பதற்கு வீரகாவியமாக இருப்பவன் சே என்பதை அண்ட சராசரமும் ஏற்றுக்கொண்டுள்ளது.

சேகுவேரா போன்ற தன்னிகரற்ற ஒரு தலைவனின் வாழ்க்கை சம்பவங்கள் ஒரு வரலாறாக இன்றும் பதியப்பட்டுள்ளது என்றால் அதற்குக் காரணம் புரட்சிக்காக தனது உயிரை மாய்த்துக்கொள்வதைக் கூட துச்சமாக எண்ணி நண்பனை அரவணைப்பது போன்று வீரமரணத்தை தழுவுவதற்கு எதிர்பார்த்திருந்ததேயாகும்.

ஏர்னெஸ்ற்றோ சேகுவேரா என்ற இயற்பெயர் ஒரு புரட்சியாளனின் தனிப்பட்ட வீரம் அல்ல அது ஏகாதிபத்திய ஆட்சியாளர்கள் அனைவரும் கதிகலங்கி அஞ்சி நடுங்கிய ஒரு புரட்சி அலை எரிமலையின் குமுறல், அணு ஆயதம்.

ஆர்ஜென்டீனாவில் 1928 ஜீன் மாதம் 14 ஆம் பிறந்த சேகுவோரா மாக்சியவாதி மருத்துவர் இலக்கியவாதி, யுத்த வல்லுனர், இராஜதந்திரி எனும் பல்வேறு பரிணாமங்களைக் கொண்ட புரட்சியாளன் மாத்திரமல்ல அதற்கு அப்பால் நற்பண்புகள் மிக்க மனித நேயம் கொண்ட ஒரு தன்னிகரற்ற தலைவன்.

தனது இளமைக்காலத்தில் இலத்தீன் அமெரிக்க தேசமெங்கும் பயணம் செய்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சே அங்கு ஏகாதிபத்திய ஆட்சியாளர்களின் கொடுங்கோல் ஆட்சியால் அவதிப்பட்ட மக்களின் வாழ்வில் வசந்தத்தை ஏற்படுத்தும் நோக்கில் தனத புரட்சியை ஆரம்பித்து மெக்சிக்கொவில் கியூபப் புரட்சியாளர் பிடல் காஸ்ட்ரோவை சந்தித்தார்.

கியூபாவில் கொடுங்கொல் ஆட்சி புரிந்த சர்வதிகாரியான படிஸ்டாவின் ஆட்சியை கவிழ்க்கும் பிடல் காஸ்ட்ரோவின் எண்ணத்தை அறிந்த சே ஜூலை 26 இயக்கத்தில் தன்னையும் இணைத்து கொண்டார்.

நாடு கடந்து தேசம் கடந்து மக்களின் நலனுக்காக காஸ்ட்ரோவுடன் இணைந்து கொண்ட சேகுவேராவின் துணிச்சல் மிக்க உதவியுடனும் மக்கள் ஆதரவுடனும் படிஸ்டாவின் படையினர் படிப்படியாக முறியடிக்கப்பட்டனர். கொடுங்கோல் ஆட்சியாளர்கள் அனைவரும் சே என்ற பெயரைக் கேட்டாலே அஞ்சி நடுங்கும் அளவுக்கு அவரது நாமம் உலகெங்கும் ஓங்கி ஒலிக்க ஆரம்பித்தது.

இடதுசாரிகளின் சாம்ராஜ்ஜியமாக திகழ்ந்த சோவியத் ஒன்றியத்தின் ஏவுகணைப் பாதுகாப்பு கட்டமைப்பை கியூபாவில் நிறுவும் பணிகளில் முன்னின்று உழைத்த சே உழைப்பாளிகளின் இரத்தத்தை உறிஞ்சிக் குடித்த ஏகாதிபத்திய கழுகுகளின் கோரப்பார்வைக்கு இலக்காகப் போவதை அறிந்திருந்தும் தனது போராட்ட குணத்தையோ எண்ணத்தையோ கைவிட தயாராக இருக்கவில்லை.

கியூபாவின் புரட்சியின் சின்னமாக விளங்கிய காஸ்ரோ வழங்கிய கியூப வங்கித்தலைவர், நிதி அமைச்சர் என்ற கௌரவங்களை ஏற்றுக்கொள்ளாது சேகுவேரா காக்கி உடையணிந்து அஞ்சா சிங்கமாக புரட்சி என்ற மட்பாதையில் தனது கால்களை தடம் பதித்தார்.

தனது நண்பரும் கியூப அதிபருமான பிடல் காஸ்ட்ரோவுக்கு சே எழுதிய வரிகள் என்னுடைய எளிமையான முயற்சிகளும், உதவிகளும் வேறு சில நாடுகளுக்குத் தேவைப்படுகின்றது. புதிய போராட்ட களங்கள் காத்திருக்கின்றன. ஏகாதிபத்தியத்தை எதிர்த்துப் போராடுவதை புனித கடமையாக மேற்கொள்வேன். அதை நிறைவேற்றவும் செய்வேன். இதுதான் என்னுடைய பலத்துக்கு ஆதாரமாக இருக்கிறது. எனது மனைவி, மக்களுக்கு எந்தச்சொத்தையும் நான் விட்டுச் செல்லவில்லை. அதற்காக வருத்தப்படவும் இல்லை. இப்படி இருப்பதில் எனக்கு மகிழ்ச்சிதான். நமது முன்னேற்றம் எப்போதும் வெற்றியை நோக்கியே வெற்றி அல்லது வீரமரணம் என்பதே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புரட்சியை இலத்தீன் அமெரிக்க தேசம் எங்கும் பரப்பும் நோக்கில் மெக்ஸிகோ, கொங்கோ, பொலிவியா என பல நாடுகளுக்கு பயணம் செய்த சேகுவேரா அங்குள்ள போராளிகளுக்கு பயிற்சி வழங்கினார். சேயின் வீரமும் அவரது ஆற்றலும் வரலாற்றில் அவர் செய்யப்போகும் எதிர்கால புரட்சிகளும் சி.ஐ.ஏ யின் கழுகுக்கண்களில் சிக்கியது. யூதாஸ் எட்டப்பன் வழித்தோன்றல் ஒருவனால் காட்டிக்கொடுக்கப்பட்ட சேயின் உடலை 1967 ஆம் ஆண்டு இன்று போன்றதோர் நாளில் சல்லடையிட்டன. **"நான் சாகடிக்கப்படலாம், ஆனால் ஒருபோதும் தோற்கடிக்கப்படமாட்டேன்"** என்ற சேயின் வார்த்தையின் மதிப்பு யாருக்கு தெரிகின்றதோ இல்லையோ உண்மையான புரட்சியாளர்களுக்கு அது விளங்கும்.

**"எனக்கு வேர்கள் கிடையாது கால்கள் தான். அடிமைத்தனம் எங்கெல்லாம் இருக்கிறதோ அங்கெல்லாம் என் கால்கள் பயணிக்கும்"**

என்ற சேயின் வரிகள் தீர்க்கதரிசனம். இன்றும் எங்கெல்லாம் போராட்டங்கள் புரட்சிகள் ஏற்படுகின்றதோ அனைத்து இடங்களிலும் சேயின் புகைப்படம் உலாவருவது அவர் இன்றும் போராட்டங்களில் கலந்து கொள்கின்றார் என்பதற்கு சான்று.

உலகிற்கு இத்தகைய உண்மைகளை உணர்த்திய சே தனது பிள்ளைகளுக்கு வழங்கிய அறிவுரை என்ன? தனிப்பட்ட முறையில் நாம் முக்கியமல்ல புரட்சி ஒன்றே மிக முக்கியமானது. உலகத்தில் எங்கேனும் யாருக்காவது கொடுமைகள் நடந்தால் அவர்களுக்காக வருத்தப்படுங்கள். ஏவ்வளவு பொது நலம் நிறைந்த ஒரு தந்தை.

ஆர்ஜன்டீனாவில் பிறந்து கியூபா, மெக்ஸிகோ, கொங்கோ, பொலிவியா போன்ற நாடுகளின் புரட்சிக்காக பாடுபட்ட சே இன்றும் புரட்சியின் முகவரியாய் மக்கள் இதயங்களில் வாழ்ந்து வருகின்றார்.







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நூலகம் உருவான வரலாறு, நூலகம் பிறந்த கதை
# The world's first library, history of library

திருமதி.சுலோசினா குமணன்
B.B.A(Hons)spl in marketing
அபிவிருத்தி உத்தியோகத்தர்
பிரதேச சபை, பூநகரி.

பிரிட்டன், பிரான்ஸ், அமெரிக்கா, சீனா, ரஷ்யா பண்டைய காலங்களில் மெசபடோமியர்கள் என்று அழைக்கப்பட்ட தற்போதைய ஈராக்கியர்கள் தான் உலகில் முதன் முதலில் நூலகம் என்கின்ற அமைப்பை ஏற்படுத்தியவர்கள்.

பண்டைய மெசபடோமிய பிரதேசம் என்பது தற்போதைய டைகிரிஸ் மற்றும் யுபிரட்டிஸ் ஆகிய ஆறுகளுக்கு இடைப்பட்ட நிலப்பரப்பாகும். முன்பு மெசபடோமியா என்ற ஒரே பெயரால் அழைக்கப்பட்ட கண்டம் தற்போது ஈரான், ஈராக் மற்றும் சிரியா ஆகிய பெயர்களில் அழைக்கப்படுகிறது. இக்கண்டத்தில் குறிப்பிடத்தக்க நான்கு பேரரசுகளாக விளங்கியவை சுமேரியா, பாபிலோனியா, அசிரியா மற்றும் அக்காத்தியார் ஆகும். மிகவும் புகழ் பெற்ற நாகரீகங்களாக உலகம் அடையாளம் கண்ட பாபிலோனியா மற்றும் சுமேரியா போன்ற நாகரீகங்கள் இங்கிருந்து பிறந்ததுதான்.



ஏறத்தாழ 3300 ஆண்டுகளுக்கு முன்பு அசிரியப் பேரரசின் நிர்வாக துறையில் ஏற்பட்ட குளறுபடிகளை களைய அப்போதைய அசிரியப் பேரரசின் அரசரான சென்னாசெரப் (கி.மு.1300-கி.மு.1200) அரசாங்கத்தின் முக்கியமான ஆவணங்கள் அனைத்தையும் களிமண் தகடுகளில் எழுதி அவற்றை சூளைகளில் சுட்டு காயவைத்து பாதுகாப்பான இடங்களில் பத்திரமாக வைக்கும்படி உத்தரவிட்டார்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதனை தொடர்ந்து அரசாங்கத்தின் ஒப்பந்தங்கள், அரசாணைகள், அரசாங்க கடிதங்கள், அரசு உளவு அறிக்கைகள் அரசு நிர்வாகத்துறையின் கீழ் வரும் முக்கிய ஆவணங்கள் போன்றவை களிமண் தகடுகளில் எழுதி சூளைகளில் சுட்டு அரசு கருவூலங்களிலும் சில கோவில் கருவறைகளிலும் பாதுகாப்பாக வைக்கப்பட்டது. நாளடைவில் உயிர்காக்கும் மருத்துவக் குறிப்புகள், சமய நூல்கள் போன்றவையும் எழுதி பாதுகாப்பாக வைக்கப்பட்டது.




அசீரியப் பேரரசின் கடைசி அரசரான அசுர்பானிபல் (கி.மு.700-கி.மு.600) காலத்தில் இக்களிமண் தகடுகளின் எண்ணிக்கை முப்பதாயிரத்தையும் தாண்டியது, அத்தனையும் வெவ்வேறு இடங்களில் வைத்து பாதுகாப்பது சிரமமாக இருந்த காரணத்தினால் அனைத்தையும் சிரியாவின் (தற்போது ஈராக்) தலைநகரான நினிவாஹ் (Ninevch) தற்போது மொசூல் (Mosul) ஒன்றிணைத்து அவற்றை துறைவாரியாக பிரித்து அடுக்க உத்தரவிட்டார். இதன்படி ஒவ்வொரு களிமண் தகடுகளும் துறைவாரியாக பிரித்து அடுக்கி பொதுமக்கள் பார்வைக்கு என்று விடப்பட்டது. இதுதான் உலகில் அமைக்கப்பட்ட முதல் நூலகம் ஆகும். இந்த நூலகம் The Royal Library of Ashubanipal என்ற பெயரில் அழைக்கப்பட்டது. எனினும் பெரும்பாலான களிமண் தகடுகள் அரசாங்க ஆவணங்களாகத் தான் இருந்தது.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த நூலகத்தை பற்றி தற்செயலாக கேள்விப்பட்ட அலெக்ஸாண்டர் (கி.மு356-கி.மு 323) நேரில் சென்று பார்வையிட்டார். அதனைத் தொடர்ந்து Ashurbanipal நூலகத்தை போல் அல்லது அதனைக்காட்டிலும் பிரமாண்டமான ஒரு நூலகத்தை கட்ட வேண்டும் என்ற எண்ணம் அவருள் தோன்றியது. எகிப்தியர்கள் பாப்பிரஸ் தாள்களில் எழுதி வந்த அந்தக்காலத்தை அலெக்ஸாண்டர் சாதுர்யமாக பயன்படுத்திக்கொண்டார். இதனைத்தொடர்ந்து எகிப்த்திலுள்ள அலெக்ஸாண்ட்ரியா நகரில் இதற்கான ஆயத்தப்பணிகள் துவங்கப்பட்டது. உலகம் முழுவதிலும் கல்வி கலை இலக்கியம் கணிதம் அறிவியல் மருத்துவம் ஆகிய துறைகளில் இருந்து சிறந்த நூல்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு அவை கிரேக்கத்தில் மொழிபெயர்க்கப்பட்டு பாப்பிரஸ் தாள்களில் எழுதப்பட்டது.



பணிகள் தொடங்கிய சிறிது காலத்திலேயே அலெக்ஸாண்டர் இறந்து போனாலும் அலெக்ஸாண்டரின் நெருங்கிய நண்பரும் அப்போதைய எகிப்தின் அரசருமான தலாமி (Ptolemy) கி.மு 305- க.மு 282) முன்னின்று பணிகளை மேற்பார்வையிட்டு நிறைவு செய்தார். இறுதியாக கி.மு300 ல் எகிப்தின் அலெக்ஸாண்ரியா நகரில் ஏழு லட்சத்திற்கும் அதிகமான பாப்பிரஸ்தாள்களை கொண்ட முதல் பொது நூலகம் அமைக்கப்பட்டு The Royal Library of Alexandria என்று பெயரிடப்பட்டது.

அதன் பிறகு ஆக்ஸ்போர்டு போன்ற புகழ் பெற்ற பல்கலைக்கழகங்கள் நூலகத்தின் பயன்பாடுகளை அறிந்து தங்களது பல்கலைக்கழக வளாகங்களிலேயே நூலகங்களை நிறுவத்தொடங்கின. அதன் பிறகு நாளொருமேனியும் பொழுதொரு வண்ணமுமாக நூலகங்கள் பல்வேறு மாற்றங்களை சந்தித்து தன்னை வளர்த்துக்கொண்டு ஒரு புதிய பரிணாமத்தை அடைந்தது.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பூநகரிக்கு உயிர் கொடுப்போம்

செல்வன்.முருகேசு டிலக்ஷன் (பூவாளன்)
அரசபுரம், பூநகரி.

சங்கத் தமிழே!
உலகத்து மொழிக்கெல்லாம்
உயிர் கொடுத்த அன்னை தமிழே!
எம் மூவாயிரம் பூநகரியின் புகழ்
புனைய எனக்கு வரம் அருள்வாய்

ஈழமதில் ஈடு இணையற்ற
பொன்னகர் எங்கள் பூநகர்
பசுமை நிறைந்த மருதமும்
கயல்கள் துள்ளும் நெய்தலும்
மும்மாரி பொழிய நல்
முல்லையும் - வளம் சேர்க்க
மும் மூர்த்திகளும் அருள் புரிந்து
ஞானிகளும் சித்தர்களும் வந்துதித்து
வழிகாட்டிய எம்மூர்.


களனிகள் எல்லாம் பொன்னென நெல்மணி காய்த்தது.
வந்த வரை தலை சாய்ந்து வரவேற்று
விருந்தளித்து பெரும்மிதம்
கொண்ட பேரூர் எங்கள் பூவூர்
பாரெல்லாம் போற்றும் தமிழ் பண்பாடு பேணி
வீரத்தின் நிலமாய் காவியம் படைத்த ஊர்
வண்மையும் திண்மையும் கொண்ட தமிழ் மன்னர்களை தமைத்து
வரலாற்றின் நாகரீகத்தின் தொட்டிலாய் இடம் பிடித்து எம்மூர்
இன்று தண்ணீர் இன்றி
பாலை வளமாகி கொடிய போரின் காடாக்கி
குடியிருக்க வழியின்றி குக்கிராமமாகிய கொடுமை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த பொன்னூர் இன்று புலம் பெயர்ந்த உறவுகளின்
நினைவுகளை மீட்டிப் பார்க்கும்
சரணாலயமாகி தவிக்கிறது
உறவுகளே இதை
உணர்வோம்
ஒன்றிணைவோம்!
கைகோர்ப்போம்!
எம்மூர் பெருமைகளை மீள் பிரதி செய்வோம்.

வளம் பெருக்கி சொந்தங்களுக்கு கை கொடுப்போம்
நாம் எல்லோரும் இணைந்தே
பூநகரிக்கு உயிர் கொடுப்போம்
வாரீர்! வாரீர்!வாரீர்






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழர் வாழ்வும் சம்பிரதாயங்களும்

மனோகரன் சீராளன்
கிளி/பூநகரி மத்திய கல்லூரி
A/L 2020•கணிதபிரிவு.

தொன்று தொட்டு தமிழர்கள் வாழ்வில் அன்றாடமும் அடிக்கடியும் கடைபிடிக்க வேண்டியனவாய் பல வழக்காறுகள், சம்பிரதாயங்கள், ஒழுக்காறுகளாக பல காணப்படுகின்றன. மரபுரீதியான பின்னணியோடு ஏதோ ஒரு காலத்தில் இவை தொடங்கப்பட்டவை. மக்கள் வாழ்வில் அர்த்த புஷ்டியான சடங்குகளைக் கொண்டு வளர்ந்து வரும் சம்பிரதாயங்கள் தவிர்க்க முடியாதபடி எம்மிடையே நிலைத்திருக்கின்றன. தொடங்கப் பெற்ற காலத்தில் நடைமுறையில் இருந்தபடி இன்றும் பின்பற்றப்படுகின்றன. எனவே தமிழர்கள் வாழ்வில் இன்றும் நின்று நிலைக்கும் சம்பிரதாயங்கள் பற்றி நாம் அறிந்து கொள்வது அவசியமாகும்.

வழங்காறுகள் என்பவை குறிப்பிட்ட ஒரு சமூகத்தினரால் தொடக்கப்பட்டு பரம்பரை பரம்பரையாக கடைபிடிக்கப்பட்டு மரபுகளாக மாறுகின்றன. உன்னிப்பாகப் பார்க்கும் போது ஒரு கிராமத்தில் ஒரு குறிச்சியில் ஒரு பிரதேசத்தினில் வாழும் தமிழ் மக்களால் கடைபிடிக்கப்படும் சடங்கு சம்பிரதாயங்கள் இன்னொரு ஊரில் பிரதேசத்தில் வழமையில்லாத ஒன்றாக இருக்கலாம். விஞ்ஞான வளர்ச்சியின் அடிப்படையில் காரணங்காட்ட முடியாமையும், காலப்பின்னணிகளும் இதற்குக் காரணமாக அமைகின்றன. அந்த வகையிலே தான் எல்லா விடயங்களும் அப்படியே ஏற்றுக்கொள்ளப்பட்டு தொடரப்பட வேண்டுமா? என்ற சிந்தனை எம் சிலரிடம் உருவாகின்றது.

விஞ்ஞான அறிவு வளர்ச்சியோடு கூடிய நவீன கண்டறிவுகளில்லாத காலத்திலேயே தொடங்கிய பல சடங்குகள் இன்னும் பின்பற்றப்படுகின்றன. அவற்றுள் பல இன்றும் அறிவியல் ஆய்வின் பின்னர் ஏற்றுக்கொள்ளப்பட்டு வருவதை நாம் காணக்கூடியதாயுள்ளது.

பொதுவாக, தமிழர்களுடையதும், நமது பிரதேசங்களில் நடைமுறையிலிருந்து வருவனவுமான வழக்காறுகளின் பின்னணியை விபரித்தறியும்போது பல அறிவு பூர்வமான செய்திகளை அறிய வந்து நாம் வியப்பில் ஆழ்ந்து விடுகின்றோம். எமது பண்பாட்டினைப் பற்றி பெருமைப்படுவதோடு நல்ல தெளிவும் பெறுகிறோம். இதில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முக்கியமென்னவென்றால் ஒரு காலச் சூழ்நிலையில் தமிழர்களான நம் மூதாதையர்களினால் தொடங்கப் பெற்ற அச்சம்பிரதாயங்கள் கால வெள்ளத்தில் அடியுண்டு கரைந்து போகாமல் இன்றுவரை எம்மவரால் தொடர்ந்து பின்பற்றப்படுவது தான் அச்சம்பிரதாயங்களின் சிறப்பை எமக்குக் காட்டுகின்றது.

வழக்கமாக கடைப்பிடிக்கப்பட்டு வரும் விடயம் இங்கு கட்டுப்பாடுகளோ கடுமையான இலக்கண வரம்புகளோ கடைபிடிக்க வேண்டும் என்ற நியதியும் அதிகமிருக்கவில்லை. வெறுமனே ஏதோ ஒரு கடமைக்காக செய்கிறோம் என்ற கருத்தில்தான் மக்களால் இவ்விடயம் உள்வாங்கப்பட்டு வந்தது.

சம்பிரதாயம் என்ற சொல்லுக்கு பழக்கங்களாகக் கடைப்பிடிக்கப்பட்டு வந்த நடைமுறை வழக்காறுகள் என்று பொருள் கொள்ளலாம். மக்கள் அன்றாட வாழ்விலும் பொழுதிலும் மங்கல, அமங்கல, சுகதுக்க நிகழ்விலும் கடைப்பிடித்து வந்த சம்பிரதாயமாக ஏற்கப்பட்டிருப்பதற்குக் காரணம் அவைகள் பிற்புலத்திலுள்ள அர்த்தங்களே ஆகும்.

அதிகாலையில் எழுந்து கொண்டு சூரியனைப் பார்த்து கும்பிட்டு, சுவாமி அறையில் வழிபாட்டோடு, முதல்நாள் மிஞ்சிய பழஞ்சோற்றிலே ஊறிய நீரை அருந்துவது முதல், மங்கையர்கள் முற்றத்தில் மெழுகி கோலம் போட்டு தாமும் பொட்டு வைத்து, பூச்சூடி காரியங்கள் ஆற்றுவது போன்ற தமிழர் பண்பாடு சார்ந்த சம்பிரதாயங்கள் இன்றும் நின்று நிலைக்கின்றன. இதைவிட பிள்ளைகள் பெற்றோர்களினதும், மூத்தோர்களினதும் பாதம் தொட்டு வழிபடல், பண்டிகைக் காலங்களில் பெரியவர்களின் ஆசிபெறல், கோயில் வழிபாடு, மங்கள சடங்கு சம்பிரதாயங்கள் எல்லாம் நம் மூதாதையர்கள் கண்டறிந்த ஏற்பாடுகள்தான் உண்ணுவது, உறங்குவது,, உரையாடுவது, சோதிடம் பார்ப்பது சகுனங்கள் நம்புவது போன்ற செயற்பாடுகளை தமிழர்கள் தங்கள் சமூக கலாச்சார விழுமியங்களின்படி பின்பற்றுகின்றார்கள்.

பிள்ளை பிறந்தது முதல் அது வளர்ந்து மனிதனாகி வயதினால் மூப்பெய்தி மண்ணில் மறையும் வரை எத்தனை சம்பிரதாயங்கள், பிள்ளைக்கு பெயரிடும் நாளில் சடங்கு பெரியவளாகி விட்டால் பூப்புனித நீராட்டு விழா, திருமணத்தின் போது பாலினை வைத்தல், கன்னிக்கால் நாட்டல், அம்மி மிதித்தல், அருந்ததி பார்த்தல், பூதாதக்கலம், சாந்தி முகூர்த்தம் என்று அளவில்லாத சம்பிரதாயங்களை பட்டியல் போட்டுப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பார்க்கலாம்.

உதாரணமாக தமிழர்கள் தம் அன்றாட வாழ்க்கையில் காலையில் நித்திரை விட்டெழுந்தவுடன் கிழக்கு நோக்கி சூரியனைப் பார்த்து கும்பிட்டு காரியங்களை ஆரம்பிப்பது சம்பிரதாயம். மனதுக்கும் உடலுக்கும் உற்சாகத்தை தரவல்ல சூரிய நமஸ்காரம், சுகாதார முறையையும் ஆரோக்கியத்தையும் பேணுவது இதனால் உடலில் அசாதரண வளர்ச்சி கட்டுப்படுத்துவதுடன் எலும்புகள், மூட்டு வியாதிகளிலிருந்து விடுபட்டு உடல் அழகைப் பேண முடியும் என்பதை தமிழர்கள் அன்றே அறிந்திருந்தார்கள் அதனை நியாயமாக்கிக் கொண்டார்கள்.

ஆண்களாயினும் சரி பெண்களாயினும் சரி நெற்றிப்புருவத்தின் நடுவில் பொட்டிடும் வழக்கம் தொன்றுதொட்டு இருந்து வருகின்றது. ஞானக் கண்ணாகக் கொள்ளப்படும் பொட்டு முகத்துக்கு பொலிவைத் தருவதோடு திருமணமாகிய பெண்களின் அடையாளமாக அவர்கள் இலட்சுமிகரத்துக்கும் அழகுக்கும் காரணமாகிறது.

மங்கையர்கள் தலைவிரி கோலமாக இருத்தல், தரையில் மார்பு பட சயனித்தல், ஆசூசம் ஏற்படும் வேளையில் ஆலயம் செல்லுதல் போன்றவை தவறான காரியங்களாகும் என்று **"தமிழர் சம்பிரதாயம்"** கூறுகிறது. பெண்கள் கோயில்களில் அங்கப் பிரதட்சணை செய்வதும் எங்கள் சமுதாயத்தில் சம்பிரதாயமாக ஏற்கப்படுவது இல்லை. இன்னும் பொதுவாக நாம் இரவிலே நித்திரை செய்யும் போது படுக்கை அறையில் பேண வேண்டிய நடைமுறையில் முக்கியமானது வடக்கு திசையிலும், தெற்குத் திசையிலும் தலை வைத்துப் படுக்கக்கூடாது என்பது இதற்கு நல்ல விஞ்ஞான விளக்கம் உண்டு.

ஒருவரின் மங்கல, அமங்கல சடங்குகளின் போது தமிழர்களின் சம்பிரதாயங்கள் பல இன்றும் வழக்கிலிருந்து வருவதை நாம் அறிவோம். எனினும் சில ஐரோப்பிய நடைமுறைகள் தமிழர் சம்பிரதாயத்தில் புகுந்து புதிய வழக்கங்களாக மாறிவிட்டன என்பதையும் குறிப்பிடலாம். உதாரணமாக பிறந்தநாள் கொண்டாட்டங்களிலும் இதர பாரம்பரிய சடங்குகளிலும் **"கேக் வெட்டுவதும்"** களியாட்ட நடனங்களில் ஈடுபடுவதும் பழைய சம்பிரதாயங்களில் முன்னர் இருந்ததாக தெரியவில்லை. மேலும் குழந்தை பிறந்த தமிழ்த் தேதியையும், நட்சத்திரங்களையும் அனுசரிக்கும் சம்பிரதாயம் முற்றிலும் மாறி ஆங்கிலத் தேதியின்படி தமிழர்கள் தம் பிறந்த தினத்தைக் கொண்டாட தலைபட்டு




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விட்டார்கள் என்பது யாவரும் அறிந்தது. திதி, நாள், நட்சத்திரம் என்பதில் இன்றைய தமிழ் மக்கள் இப்போது கருத்தாக இருப்பதாகச் தெரியவில்லை.

தமிழர் சம்பிரதாயத்தில் சகுனம் பார்ப்பது சோதிடம் பார்ப்பது போன்ற சம்பிரதாயங்களை மக்கள் இப்போது அலட்சியப்படுத்தி வருவதையும் நாம் காண்கின்றோம். சிறுமியாக இருந்து பருவமடைவது என்பது ஒரு இயற்கை நிகழ்வு. அதனை நம் முன்னோர்கள் எத்தனை புனிதமாகக் கருதி அதற்கான சடங்கு சம்பிரதாயங்களை கடைப்பிடித்து வந்தனர். இன்று அவையும் வழக்கிழந்து வருகின்றது.

ஒரே நாட்டில் வாழுகின்ற தமிழ் மக்கள் கடைபிடிக்கும் வழக்காறுகள், சம்பிரதாயங்களிலே வேற்றுமைகளும், விசேடனங்களும் இருக்கின்றன. நம் நாட்டிலுள்ள சம்பிரதாயங்களை எடுத்துக் கொண்டால் கூட வடக்கிலே வாழும் தமிழர், கிழக்கில் வாழும் தமிழர், மலையக தமிழ் மக்கள், கரையோரப் பிரதேச தமிழர் என்பவர்களிடத்தில் வெவ்வேறு விதமான சடங்கு சம்பிரதாயங்கள் நிலவுகின்றன. கோயில் வழிபாட்டு முறைகள், மரணக்கிரியைகள், திருமண நடைமுறைகளிலெல்லாம் வித்தியாசமான போக்குகள் கடைப்பிடிக்கப்பட்டு அங்கு அவதானிக்கலாம் . பண்டைய தமிழர்களின் தீர்க்கத்தரிசிகள் தெள்ளிய அறிவும் சிந்தனையும் தந்த பரிசுகளே. நம் சம்பிரதாயம் அவற்றை நாம் பொருத்தமாகப்பின்பற்றி வாழ்வது எம் ஒவ்வொருவரினதும் கடமையாகும்.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புத்தகங்களின் பெருமையும் நூலகங்களின் தேவையும்

செல்வி. ரசிந்தா கணேசலிங்கம்.
BA (Hons) SPL Incommunity and
Regional Planning
அபிவிருத்தி உத்தியோகத்தர்.
பிரதேச சபை பூநகரி.

இன்றைய சமூகவலைத்தளங்களின் ஆதிக்கத்தால் நூல்வாசிப்பு மரபுகள் மாறிவருகின்றன. திறன்பேசிகளில் மின்நூலாக வாசித்தல், ஒலிப்புத்தகம் காணொளி வழிகற்றல் என்ற நிலையில் வீட்டுக்கொரு நூலகம் என்பதையோ புத்தகங்களை கையில் வைத்துக் கொண்டு வாசிக்க வேண்டும் என்பதையோ இன்றைய தலைமுறையினரால் புரிந்து கொள்ள முடியவில்லை.

நூலகம் என்பது நூல்களின் ஒழுங்கான வரிசையமைப்பு பழைய புதிய நூல்களின் கலப்படம் போன்றவை அடங்கும். பழங்காலத்தில் மக்கள் தமது எண்ணங்களையும் செய்திகளையும் வெளிப்படுத்த கற்பாறைகள், களிமண்பலகைகள், மரப்பட்டைகள், தோல்கள், துணிகள், பனையோலை முதலியவற்றைப் பயன்படுத்தினர். தமிழகத்தில் ஓலைகளே மிகுதியாக பயன்படுத்தப்பட்டன. ஓலைகளை பதப்படுத்தி எழுதத்தக்க ஓலைச்சுவடிகளாக்கினர். அதன் பிறகு காகிதம் கண்டுபிடிக்கப்பட்டது. எழுதவும் அச்சிடவும் காகிதத்தையே பயன்படுத்தினர்.

பண்டைக்காலத்தில் நூல்களின் பயன்பாடு அதிகமாக இல்லை. அரண்மனைகளிலும், மாளிகைகளிலும் கோவில்களிலும் பெருமை சேர்ப்பதற்காகவே நூல்கள் அடுக்கி வைக்கப்பட்டன. பிற்காலத்தில் இவை மாறி நூல்கள் படிப்பதற்கே என்ற எண்ணம் தழைத்தது.

கல்வி மக்களைத் தத்தம் எண்ணங்களையும் அதனால் விளைந்த அறிவையும் பகிர்ந்து கொள்ள தூண்டியது. இதுவே புதிய இலக்கியங்களும், இலக்கணங்களும் தோன்றக் காரணமாயின. பல்துறை நூல்கள் அடங்கிய பொது நூலகங்கள் நாடு முழுவதும் திறக்க ஏற்பாடு செய்யப்பட்டது. அது தனி ஒருவரிடம் இருந்தால் அதன் பயன் பிறருக்கு கிடைக்காது அதனால் அதே நூல் பொது நூலகத்தில் வைக்கப்பட்டால் அதன் பயன் பலருக்கும் பயன்படும் அதனால் எல்லா இடங்களிலும் பொது நூலகம் திறக்கப்பட்டன.

நூலகங்கள் புத்தகசாலை, ஏடகம், சுவடியகம், சுவடிச்சாலை, வாசகசாலை, படிப்பகம், நூல்நிலையம், பண்டாரம், என்றும் அழைக்கப்படுகின்றது.

புத்தகங்களின் பெருமை பற்றியும் புத்தக வாசிப்பின் அருமை பற்றியும் நூலகங்களின் தேவை பற்றியும் நான் வாசித்த பொன் மொழிகளின் தொகுப்பு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- ❖ நான் இன்னும் வாசிக்காத நல்ல புத்தகம் ஒன்றை வாங்கி வந்து என்னைச் சந்திப்பவனே என் தலை சிறந்த நண்பன் - ஆபிரகாம்லிங்கன்
- ❖ ஆயிரம் புத்தகங்களை வாசித்தவன் ஒருவன் இருந்தால் அவனைக்காட்டுங்கள். அவனே எனது வழிகாட்டி. ஜீலியஸ்சீசர்
- ❖ அக்கறை உள்ள பெற்றோரும் அலுமாரி நிறையப் புத்தகங்களும் வாய்க்கப்பெறும் குழந்தையே அதிஷ்டசாலி. ஜான்மெக்காலே
- ❖ ஒரு நூலகத்தையும் ஒரு தோட்டத்தையும் வைத்திருக்கும் ஒருவருக்கு வேறெதுவும் தேவையில்லை. . சிசரோ
- ❖ நூலகம் இல்லாத ஊரை நான் ஒரு ஊராக மதிப்பதே இல்லை. மாமேதை லெனின்
- ❖ எந்த வீட்டில் நூல்நிலையம் இருக்கிறதோ, அந்த வீட்டில் தான் ஒளிவிளக்கு இருக்கிறது. பிளாட்டோ
- ❖ ஒரு புத்தகம் எழுத அரைவாசி நூல்நிலையத்திற்கு மேல் படிக்கவேண்டும். ஜான்சன்.
- ❖ உலக வரைபடத்திலுள்ள மூலைமுடுக்குகளுக்கெல்லாம் போக விரும்புகிறாயா? ஒரு நூலகத்துக்குச் செல். டேக்கார்டஸ்
- ❖ என்மனம் விரும்பும் நூல்களைக் கொடுங்கள் வாழ்நாள் முழுவதும் சிறையில் வாழச் சம்மதிப்பேன். மாஜினி.
- ❖ பயன்படுத்தப்படாத புத்தகம் வெறும் காகிதக்கட்டுத் தான். சீனப்பழமொழி
- ❖ உண்மையான வாசகன் வாசிப்பை முடிப்பதே இல்லை. ஆசுகார் வைல்டு.
- ❖ ஒரு எழுத்தாளன் ஒரு புத்தகத்தை தொடங்கி வைக்கிறான். வாசகன் அதை முடித்து வைக்கிறான். சாமுவேல் ஜான்சன்.
- ❖ மனிதனின் ஆகப்பெரிய கண்டுபிடிப்பு புத்தகம். ஆல்பர்ட் ஜன்சுடீன்.
- ❖ புரட்சிப்பாதையில் கைத்துப்பாக்கிகளை விட பெரிய ஆயுதங்கள் புத்தகங்களே லெனின்
- ❖ எங்கே நல்ல புத்தகங்கள் எரிக்கப்படுகின்றனவோ அங்கு விரைவில் நல்ல மனிதர்களும் எரிக்கப்படுவார்கள். சேகுவாரோ
- ❖ உடலுக்கு எப்படி உடற்பயிற்சியோ அதுபோல மனப்பயிற்சி புத்தக வாசிப்பு சிக்மண்ட் பிராய்டு.
- ❖ தான் தூக்கிலிடுவதற்கு ஒரு நிமிடம் முன்பு வரை வாசித்துக்கொண்டிருந்தவர். பகத்சிங்
- ❖ சில புத்தகங்களை சுவைப்போம். சிலவற்றை அப்படியே விழுங்குவோம். சில புத்தகங்களை மென்று ஜீரணிப்போம். பிரான்சிஸ் பேக்கன்.
- ❖ உண்மையான வாசகன் வாசிப்பதை முடிப்பதே இல்லை. ஆஸ்கார் வைல்ட்.
- ❖ நல்ல புத்தகங்களைப் போன்ற நம்பிக்கை இந்த உலகத்தில் இல்லை ஆங்கிலப்பழமொழி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கற்பகத்தரு

## பனைமரத்திலிருந்து பெறப்படும் உணவுப் பெருட்களும் கைவினைப் பொருட்களும்

பொன்னம்பலம் செல்லத்துரை
கௌதாரிமுனை,
பூநகரி

பாரிலே நேரிலே பாரத போரிலே
பரிதவிக்கும் எங்கள் நாட்டிலே
பஞ்சம் தாங்கிய பனைமரம் பலவித
பலநொடி இருக்குதெங்கள் நாட்டிலே

பசி தாகம் நுங்கினால் தீர்க்கலாம்
பசு மாடு ஆடுகளைக் காக்கலாம்
ஒரு பருவம் தன்னிலே
காய்வெட்டி கள்ளினை
பானை பானையாக சேர்க்கலாம்

உணவில் மிஞ்சிய பழரச வெண்சுவை
தரும்பினாட்டு வகை ஆக்கலாம்.
அதைப் பாணிக்கல் உறையில் தோய்க்கலாம்
அதில் பாகம் பண்ணி பறன் மீது வைத்து
விளைவான பின்பு எடுத்துப் பசி நீக்கலாம்

விதைகளைப் பாத்தியில் தாக்கலாம்
கிழங்கானதும் வெட்டியே பேர்கலாம்
அதை வெயிலினிலே அவித்து காயவைத்து
விதம் விதமாக பொழுது போக்கலாம்
ஒடியலிலே கூழ் புட்டெல்லாம் செய்து
பலகாரம் பல பண்ணிக் கொட்டலாம்

பாத்தியிலே விதை நீக்கியதினையும்
தேனைப் போல தீனியும் தின்னலாம்
ஊமல் சேர்த்தினை கரியாக்கி எங்கள்
கம்மியர் தன்னை ஆயுதம் செய்யவும் பண்ணலாம்

பாலரை ஏற்றிடு பாலர்கள் செப்பிடு
பதனி இனிப்பினிப்பாய் தீருமே
தீர்க்கும் பல வித நோய்களை மேலும்
பரிகிடுவோர்க்கு பலன் தரும் பாணிக்கட்டியாகுதே

ஒலையைப் பற்றியே ஓதிடு
இப்பல உவமானம் பல சொல்லிக் கவி கட்டலாம்
பெட்டி, கடகம், நீத்துப் பெட்டி , வெற்றிலைத் தட்டு,


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரிதட்டினோடு, பனங்கட்டிக் குட்டான்,
தலைப் பெட்டிகள், சில்லுகள் பொல்லுகள்
பாதரசமும் தாங்கு சலங்கை, சங்கிலி, அட்டியல்
பாண்புடன் பல நகைச் செட்டுக்கள் பண்ணி
பக்குவமுடன் தன் பாட்டில் பொழுதை விட்டு
பச்சமுடன் இருப்பார் குட்டிகள்

பன்னவேலை வர்ணமதாகவே எண்ணிலடங்காததை
எண்ணலாம் பெயர் எடுத்துரைக்கிறேன் கேளு
பீலிப் பெட்டி, செத்தல் பெட்டி, பறிகள்,
பலவித பாய்கள், ஊமல் உறை கூடை
ஈர்க்குடன் அடவியன் ஈர்க்கு விளக்குமாறு,
முறம்(சுளகு), தட்டு திருகாணி உறியினில் தூக்கலாம்

வீடு மேயலாம் வேலி அடைக்கலாம்
வரும் வேர்வை அகற்றிட விசிறிகள் பற்பல
விநோதமாகவே படைக்கலாம்.

மேலும் விருந்து அருந்திட பிளா, தட்டுவம்,
பட்டை கோலியும் கண்ணி அள்ளிக் குடிக்கலாம்.
ஓவியம், ஒடியர் காவியம் ஆனவை யாவையும்
எழுதியே வைக்கலாம்.

அதில் கழிவாகிய பழ ஓலையெல்லாம்
காணிக்கு பயனாக்கலாம்.
பின்னர் காணியை உழுகையில் கன்னியர்
மூரியை கண்டு விறகு தன்னில் சேர்க்கலாம்

பனைமரம் வெட்டியே வீடு கட்டலாம்.
கருக்கோல மட்டை படலை பட்டி ஆக்கலாம்.
கருக்கை நீக்கியே பல பிரியோசனங்கள் செய்யலாம்.
எக்காலத்திலும் இவற்றை கவனிப்போர்
கஸ்ரமின்றி வறுமை போக்கலாம்

பாரிலே நேரிலே பாரத போரிலே
பரிதவிக்கும் எங்கள் நாட்டிலே
பஞ்சம் தாங்கிய பனைமரம் பலவித
பலநொடி இருக்குதெங்கள் நாட்டிலே

"எமது பிரதேச அடையாள கற்பகத் தருவை காப்போம்"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஸ்ரீ மாருதி பிறிண்டேர்ஸ் 0777 917680

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org